श्रीः

॥ प्रश्नोपनिषत् ॥

॥ प्रथमः प्रश्नः ॥

हरिः ओम् । सुकेशा च भारद्वाजः, शैब्यश्च सत्यकामः, सौर्यायणी च गार्ग्यः, कौसल्यश्चाश्वलायनी, भार्गवो वैदर्भिः, कबन्धी कात्यायनस्ते हैते ब्रह्म-

---

ஶ்ரீ:

முதல் ப்ரஶ்நம்

இந்த உபநிஷத்தும் மற்றை உபநிஷத்துக்கள் போல் ஒரு ஆக்யாயிகையின் வாயிலாகத் தத்வத்தை உணர்த்துகின்றது. இவ்விடத்திய ஆக்யாயிகை என்னவென்றால் :—ஒரு காலத்தில் ஸுகேஶர் ஸத்யகாமர் ஸௌர்யாயணி கௌஸல்யர் பார்க்கவர் கபந்தீ என்று ஆறு ருஷிகள் இருந்தார்கள். அவர்களெல்லாரும் வேதாத்யயநத்தையே பராயணமாகவும் வேதார்த்தத்தை விசாரிப்பதிலேயே நோக்குள்ளவர்களாகவும் இருந்தும், ஸ்வரூபத்தாலும் குணத்தாலும் மிகப் பெரிதாக இருக்கும் பர ப்ரஹ்மத்தை அறியாதவர்களாய், அதை அறியவேண்டுமென்னும் இச்சையுடன், மஹா ப்ரஹ்மவித்தான பிப்பலாதர் என்னும் மஹர்ஷியை அடைந்து, ப்ரஹ்மத்தை உபதேஶிக்கவேண்டுமென்று ப்ரார்த்தித்தார்கள். பிப்பலாதரும் அந்த ப்ரார்த்தனைக்கு இணங்கி அவர்களுள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு ப்ரஶ்நம் கேட்கும்படி அநுமதி கொடுத்தார். அப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு ப்ரஶ்நம் செய்ய, ஆறு ப்ரஶ்நங்கள் ஏற்பட்டன. அந்த ப்ரஶ்நங்களும் அவைகளின் ஸமாதாநங்களுமே இந்த உபநிஷத்தின் விஷயம். இந்தக் காரணத்தைக்கொண்டே இந்த உபநிஷத்துக்கு 'ப்ரஶ்நோபநிஷத்' என்னும் பெயர் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த ப்ரஶ்நங்களுக்குச் சொல்லப்பட்டுள்ள ஸமாதாநங்கள் ஸாமாந்ய ஜநங்களுக்கு வ்யக்தமாக விளங்கமாட்டா. ஸமாதாநம் முழுவதும் நேருக்கு நேராக இராமல் பரோக்ஷ ரூபமாகவே சொல்லப்படுகின்றன. அதற்குக் காரணம் அவை ஸ்புடதரமான உபதேஶத்திற்கு அநர்ஹமானவை என்பதே. "**परोक्षप्रिया इव हि देवाः**" [தேவர்கள் தாம் செய்யும் உபதேஶத்தைப் பரோக்ஷமாகச் செய்ய ப்ரியப்படுவார்கள் போலும்] என்பது ஶ்ருதி வாக்யம். நமது ஆசார்யர்கள், இந்த ப்ரஶ்நங்களெல்லாம் தத்வங்களையே உணர்த்துகின்றனவென்றும், ஸமாதாநங்களும் அந்தத் தத்வங்களையே ப்ரதிபாதிக்கின்றனவென்றும் உபபத்தி பூர்வகமாக நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த உபபத்திகள் என்னவென்பதைச் சற்று விசாரிப்போம்.

இவ்விடத்திற் செய்யப்படும் ப்ரஶ்நங்களுள் முதல் ப்ரஶ்நமானது "இந்தப் ப்ரஜைகளெல்லாம் எவ்விடமிருந்து உண்டாகின்றன?"

http://acharya.org

परा ब्रह्मनिष्ठाः परं ब्रह्मान्वेषमाणाः 'एष ह वै तत्सर्वं वक्ष्यति' इति ते ह समित्पाणयो भगवन्तं पिप्पलादमुपसन्नाः ॥ ॥१॥

என்பது. அதற்கு ஸமாதாநம் சொல்ல ஆரம்பிக்குமிடத்தில், 'ப்ரஜாபதியானவர் ப்ராஜைகளை உண்டுபண்ண வேண்டுமென்று இச்சித்தார். அவர் தபஸ் செய்தார். தபஸ் செய்து 'ரயி' 'ப்ராணன்' என்று சொல்லப்படும் இரண்டு வஸ்துக்களை ஸ்ருஷ்டித்தார். இவை இரண்டும் பஹுவாக ப்ரஜைகளை உண்டுபண்ணும் என்பது அவருடைய கருத்து' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்விடத்தில் 'ப்ரஜாபதி' என்னும் பதம் பரப்ரஹ்மத்தைக் குறிக்கின்றது என்பது நமது ஸித்தாந்தம். ஆனால், 'ப்ரஜாபதி' என்று பதப்ரயோகம் செய்யப்பட்டிருப்பதையும் 'அவர் தபஸ் செய்து ஸ்ருஷ்டித்தார்' என்று கர்மாதீந ஸ்ருஷ்டி சொல்லப்பட்டிருப்பதையும் பார்க்கும்பொழுது, 'ஜகத்தை ஸ்ருஷ்டித்தவர் ப்ரஜாபதி என்று சொல்லப்படும் சதுர்முக ப்ரஹ்மாவே; அவரே ஜகத் காரணம்' என்று ப்ரதிபாதிக்கப்பட் டிருப்பதாகத் தோன்றலாம். அது சரியன்று. ஏனென்றால், இந்தக் கண்டத்திலேயே கடைசியில் பரப்ரஹ்ம ப்ராப்தியே பலமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது; அர்ச்சிராதி கதியை ஸங்க்ரஹமாகக் குறிப்பிட்டு அபுநராவ்ருத்தியும் சொல்லப்பட்டிருக்கின்றது. இவையெல்லாம் 'பரப்ரஹ்மமே இவ்விடத்தில் ப்ரதிபாதிக்கப்படுகின்றது' என்பதை ஸூசிப்பிக்கப் போதுமான லிங்கம். சதுர்முக ப்ரஹ்மாவை உபாஸிப்பவர்களுக்கு, இம்மாதிரி பலம் ஓரிடத்திலும் சொல்லப்படவில்லை யன்றோ? நிற்க: இந்த ஆறு ருஷிகளும் பரப்ரஹ்ம விஷயமாக உபதேஶம் பெறுவதற்காகவே பிப்பலாதரை வந்து அடைந்ததாக முதலிற் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால், பிப்பலாதராற் செய்யப்படும் உபதேஶம் பரப்ரஹ்ம விஷயமாகவே இருத்தல் வேண்டும் என்பது ஸித்தம்.

1. [ப - ரை.] **भारद्वाजः** - பரத்வாஜருடைய குமாரராகிய, **सुकेशा च** - ஸுகேஶரும், **शैब्यः** - ஶிபியின் குமாரராகிய, **सत्यकामः** - ஸத்யகாமரும், **गार्ग्यः** - கர்க்க கோத்ரோத்பவரான, **सौर्यायणी** - ஸௌர்யாயணியும், **आश्वलायनः** - அஶ்வலாயநருடைய குமாரராகிய, **कौसल्यः** - கௌஸல்யரும், **वैदर्भिः** - விதர்ப்பருடைய குமாரராகிய, **भार्गवः** - பார்க்கவரும், **कात्यायनः** - காத்யாயந கோத்ரத்தில் ஜநித்த, **वैदर्भिः** - வைதர்ப்பி என்பவரும், **ते ह** - ப்ரஸித்தர்களான, **एते** - இந்த [ஆறு ருஷிகளும்], **ब्रह्मपराः** - வேதத்தையே எப்பொழுதும் அத்யயநம் செய்பவராகவும், **ब्रह्मनिष्ठाः** - அந்த வேதத்தின் அர்த்தத்தையே எப்பொழுதும் விசாரிப்பவராகவும் இருந்துகொண்டு, **परं ब्रह्म** - உத்க்ருஷ்டமான ப்ரஹ்மத்தை [ஸ்வரூபத்தாலும் குணத்தாலும் மிகப்பெரிதாயிருக்கும் வஸ்துவை], **अन्वेषमाणाः** - அறிய வேண்டுமென்னும் ஆவலுடையவர்களாய், **एष ह वै** - இந்த [அதாவது: நம்மால் ப்ரஹ்மவித் தென்று க்ரஹிக்கப்பெற்று நம்முடைய புத்தியில் தென்படும் இந்தப்

http://acharya.org

तान् ह स ऋषिरुवाच "भूय एव तपसा ब्रह्मचर्येण श्रद्धया संवत्सरं संवत्स्यथ । यथाकामं प्रश्नान् पृच्छथ । यदि विज्ञास्यामः सर्वं ह वो वक्ष्यामः" इति ॥ ॥२॥

பிப்பலாதர் என்னும் மஹர்ஷி], **तत्सर्वं** - அதெல்லாவற்றையும் [அதாவது: நாம் அறிய விரும்பும் அர்த்தங்களெல்லாவற்றையும்], **वक्ष्यति** - உபதேஶிப்பர், **इति** - என்று [ஆலோசித்து], **ते ह** - அவர்களெல்லாரும், **समित्पाणयः** - ஸமித் சுமையைக் கையில் எடுத்துக்கொண்டு, **भगवन्तं पिप्पलादम्** - பூஜ்யரான பிப்பலாதர் என்னும் மஹர்ஷியை, **उपसन्नाः** - அடைந்தார்கள்.

सुकेशा - என்பதில் ஆகாராந்தமும், **सौर्यायणी** - என்பதில் ஈகாராந்தமும், வேதத்திற்கு ஒத்த ரூபங்கள். **समित्पाणयः** - ப்ரஹ்மோபதேசத்தை உத்தேஶித்து ஆசார்யனிடம் உபஸதநம் செய்யும் காலத்தில் ஶிஷ்யர்கள் ஸமித் சுமையை உபாயநமாகக்கொண்டுபோய் ஸமர்ப்பிக்க வேண்டுமென்று ஶாஸ்த்ரம் சொல்லுகின்றது.

---

2. [ப - ரை.] **तान् ह** - அந்த ருஷிகளை நோக்கி, **स ऋषिः** - அந்த ருஷியானவர் [பிப்பலாதர்], **उवाच** - சொன்னார். [அவர் சொன்னது என்னவென்றால்:—] "**भूय एव** - மறுபடியும், **तपसा** - [ஶரீரஶோஷணத்தை லக்ஷணமாகவுடைய] தபஸ்ஸுடனும், **ब्रह्मचर्येण** - ப்ரஹ்மசர்ய வ்ரதத்துடனும், **श्रद्धया** - [ஆஸ்திக்ய புத்தியை லக்ஷணமாக உடைய] ஶ்ரத்தையுடனும் [கூடினவர்களாய்], **संवत्सरं**-ஒரு வர்ஷ காலம், **संवत्स्यथ**- [இவ்விடத்தில்] வஸியுங்கள். **यथाकामम्** - [அதற்குப் பிறகு] யதேஷ்டமாக, **प्रश्नान्** - ப்ரஶ்நங்களை, **पृच्छथ** - கேளுங்கள். **यदि विज्ञास्यामः** - [நீங்கள் கேட்கும் அர்த்தங்களை] நாம் அறிந்திருந்தோமேயானல், **सर्वं** - எல்லாவற்றையும் [வஞ்சனையின்றிக்கே], **वः** - உங்களுக்கு, **वक्ष्यामः** - உபதேஶிப்போம்," **इति** - என்று.

भूय एव - மறுபடியும். ஏற்கெனவே அந்த ஆறு ருஷிகளிடத்தில் தபஸ் ப்ரஹ்மசர்யம் ஶ்ரத்தை இவையெல்லாம் பூர்ணமாக இருந்தனவென்பதை இந்தப் பதம் ஸூசிப்பிக்கின்றது. அப்படியிருந்தும், ப்ரஹ்ம வித்யையை க்ரஹிப்பதற்காக மறுபடியும் அவைகளின் ஸம்பத்தியை ஸம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்பது தாத்பர்யம். நிற்க, ஶிஷ்யர்கள் கிடைத்தார்கள் என்னும் ஸந்தோஷத்தால், ஸஹஸா ப்ரஹ்ம வித்யையை அவர்களுக்கு உபதேஶிக்கக்கூடாது என்று ஶாஸ்த்ரம் சொல்லுகின்றது. பெற்றது குணமாக உபதேஶித்தால் 'शिष्यपापं गुरोरपि' என்கையாலே ஆசார்யனுக்கு நிஷ்டை குலையுமன்றோ? தவிர இம்மாதிரி ஒரு வ்ரதத்தை விதிப்பது ஶிஷ்யர்களுடைய ஶ்ரத்தையின் உறுதியைப் பரீக்ஷிக்கவும் ஆகும்.

http://acharya.org

अथ कबन्धी कात्यायन उपेत्य पप्रच्छ “भगवन् कुतो ह वा इमाः प्रजाः प्रजायन्ते ?” इति ॥ ॥ ३ ॥

तस्मै स होवाच “प्रजाकामो ह वै प्रजापतिः । स तपोऽतप्यत । स तपस्तप्त्वा । स मिथुनमुत्पादयते रयिञ्च प्राणञ्चेत्येतौ मे बहुधा प्रजाः करिष्यत इति ॥ ॥ ४ ॥

“आदित्यो ह वै प्राणो रयिरेव चन्द्रमाः । रयिर्वा एतत्सर्वं यन्मूर्तञ्चामूर्तञ्च । तस्मान्मूर्तिरेव रयिः ॥ ॥ ५ ॥

---

3. [ப - ரை.] **अथ** - பிறகு [ஒரு வர்ஷம் அம்மாதிரி வஸித்த பிறகு], **कात्यायनः कबन्धी** - காத்யாயந கோத்ரஜரான கபந்தீ என்பவர், **उपेत्य** - [பிப்பலாதரிடம்] வந்து, **पप्रच्छ** - கேட்டார். “**भगवन्** - ஹே பூஜ்யரே!, **इमाः प्रजाः** - இந்த ப்ரஜைகளெல்லாம், **कुतो ह वा** - எவ்விடமிருந்து, **प्रजायन्ते** - உண்டாகின்றன.” இந்த ப்ரஶ்நத்தின் தாத்பர்யம் :—இந்த ஜகத்தின் ஸ்ருஷ்டியைச் செய்பவர் யார்?’ என்பதே.

---

4. [ப - ரை.] **तस्मै** - அவருக்கு, **स ह** - அந்தப் பிப்பலாதர், **उवाच** - [பின் வருமாறு] உபதேஶித்தார். **प्रजापतिः** - பரமாத்மா, **प्रजाकामो ह वै** - ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்னும் விருப்பத்தை உடையவரன்றோ? **सः** - அந்தப் பரமாத்மா, **तपः** - [ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்னும் ஸங்கல்ப ரூபமான] தபஸ்ஸை, **अतप्यत** - செய்தார். **सः** - அந்தப் பரமாத்மா, **तपः** -அந்த ஸங்கல்பத்தை- **तप्त्वा** ஸங்கல்பித்து, **रयिञ्च प्राणञ्च**- ரயி என்றும் ப்ராணன் என்றும், **मिथुनम्** - மிதுநத்தை, **उत्पादयते** - ஸ்ருஷ்டிக்கிறார். ‘**एतौ** - இந்த இரண்டும், **मे** - எனக்கு, **बहुधा** - அநேக விதமான, **प्रजाः** - ப்ராணிகளை, **करिष्यतः** - உண்டுபண்ணுவார்கள்’, **इति** - என்னும் [அபிப்ராயத்துடன் அந்த மிதுநத்தைத் ஸ்ருஷ்டித்தார்.]

‘**रयि**’ என்பது ப்ரக்ருதி என்னும் தத்வத்தையும், ‘**प्राणः**’ என்பது ஜீவன் என்னும் தத்வத்தையும் குறிக்கின்றன. இது மேல் வரும் விவரணத்திலிருந்து விளங்கும். ஜகத் ஸ்ருஷ்டியைச் செய்யும் காலத்தில் பகவான், முதலில் சேதந தத்வம் அசேதநதத்வம் இவைகளை ஸ்ருஷ்டிப்பதாகவே ஶாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. அந்த இரண்டுமே இவ்விடத்தில் விவக்ஷிதம்.

---

5. இந்த மந்த்ரத்தில் ‘ரயி’ என்பதன் அர்த்தம் விளக்கப்படுகின்றது. ‘ஆதித்யன்’ என்பதன் கருத்து அடுத்த மந்த்ரத்தில் விளக்கப்படுகின்றது.

[ப - ரை.] **आदित्यो ह वै प्राणः** - ஆதித்யன் என்பதே ப்ராணன். **रयिरेव चन्द्रमाः** - சந்த்ரனே ரயி. **यन्मूर्तञ्च अमूर्तञ्च** -மூர்த்தமாயும் அமூர்த்தமாயுமிருக்கும், **एतत्सर्वम्** - இதெல்லாம், **रयिर्वा** - ‘ரயி’ என்பதே. **तस्मात्** - ஆகையால், **मूर्तिरेव** - மூர்த்தியே, **रयिः** - போக்யமான வஸ்து.

http://acharya.org

“अथादित्य उदयन् यत्प्राचीं दिशं प्रविशति, तेन प्राच्यान् प्राणान् रश्मिषु सन्निधत्ते । यद्दक्षिणां यत्प्रतीचीं यदुदीचीं यदधो यदूर्ध्वं यदन्तरादिशो यत्सर्वं प्रकाशयति तेन सर्वान् प्राणान् रश्मिषु सन्निधत्ते ॥ ॥ ६ ॥

‘रयि’ என்னும் பதம் போக்யமாயுள்ள வஸ்துக்களெல்லாவற்றையும் குறிக்கும். அந்தப் போக்யதையை உத்தேஶித்தே அதைச் சந்த்ரனென்று பேசுகிறார். ஐந்து மஹா பூதங்களும் ஒருவிதமான பரிணாமத்தை அடைந்து போக்ய வஸ்துக்களாக மாறுகின்றபடியால் அவைகளின் கார்யமே ‘ரயி’ ஆகும். அந்த மஹா பூதங்களுள் ப்ருதிவீ அப் தேஜஸ் மூன்றும் கடிநமாக இருப்பதால் மூர்த்தங்கள் என்றும், வாயு ஆகாஶம் இரண்டும் காடிந்ய மற்றவையாதலால் அமூர்த்தங்களென்றும் சொல்லப்படுகின்றன.

आदित्यः என்பது ஸூர்யனைக் குறிக்கும் இவ்விடத்தில் ஜீவனை ஆதித்யனென்று பேசுவதற்கு உபபத்தி, ஸூர்யனைப்போல் ஜீவனும் போக்தாவாகிறான் என்பதே. **[आदत्त इति आदित्यः** - அநுபவத்திற்காக எடுத்துக்கொள்ளுகிறான்.] என்னும் வ்யுத்பத்தியால் ஸூர்யனைப் போக்தாவென்று சொல்லக்கூடுமன்றோ? இதிலிருந்து ஸித்திப்பது என்னவென்றால்; ‘பரமாத்மா ஸங்கல்பித்தான்; ஸங்கல்பித்துப் போக்தாவாகிற ஜீவனையும் போக்யமாகிற அசேதந தத்வத்தையும் ஸ்ருஷ்டித்தான்’ என்பதே. **“भोक्ता भोग्यं प्रेरितारं च मत्वा”** என்கிறபடி தத்வங்கள் மூன்றே.

---

6. ஜீவ தத்வத்தை ‘ஆதித்யன்’ [ஸூர்யன்] என்று வ்யவஹரிப்பதன் உபபத்தி விளக்கப்படுகின்றது. ஸூர்யன் உதயமானவுடன், அவனது கிரணங்கள் ஸகல திக்குக்களிலும் பரவி ஆங்காங்கு இருக்கும் பதார்த்தங்களை ப்ரகாசிப்பிப்பதுபோல, இந்த ஜீவனும், ஸுஷுப்தி ஸ்தாநத்திலிருந்து விழித்துக்கொண்டவுடன், தேஹத்தில் நாலு பக்கங்களிலும் இருக்கும் இந்த்ரியங்களில் தனது தர்ம பூத ஜ்ஞாநத்தைச் செலுத்தி அந்த இந்த்ரியங்களைப் பரிக்கிறான். ஆகையால், அவனை ஸூர்யனாகப் பேசுவது உபபந்நமே. நிற்க, இம்மாதிரி தர்மபூத ஜ்ஞாநத்தின் வழியாக ப்ராணங்களாகிற இந்த்ரியங்களை அவன் பரிக்கிறபடியால் அவனை ப்ராணனென்று பேசுவதும் உபபந்நமே. இதுதான் இந்த மந்த்ரத்திற் சொல்லப்படும் பொருள்.

[ப - ரை.] **अथ** - பிறகு [‘ரயி’ என்னும் ஶப்தத்தை நிரூபித்த பிறகு ப்ராணனாகிற ‘ஆதித்ய’ ஶப்தம் நிரூபிக்கப்படுகின்றது]. **आदित्यः** - ஸூர்யன், **उद्यन्** - உதயமாகிக்கொண்டு, **यतः** - எந்தக் காரணத்தால், **प्राचीं दिशम्** - கிழக்குத் திக்கை, **प्रविशति** - ப்ரவேஶிக்கிறானோ, **तेन** - அந்தக் காரணத்தால், **प्राच्यान्** கிழக்குத் திக்கிலுள்ள [கண் முதலிய] **प्राणान्** - இந்த்ரியங்களை, **रश्मिषु** - [தனது தர்மபூத ஜ்ஞாநமாகிற] கிரணங்கள் வழியாக, **सन्निधत्ते** - நியமிக்கிறான். [மேல் வரும் **“यद्दक्षिणाम्”** இத்யாதி

http://acharya.org

"स एष वैश्वानरो विश्वरूपः प्राणोऽग्निरुदयते । तदेतदृचाऽभ्युक्तम्॥
॥७॥

யான வாக்யங்களில், இம்மாதிரி வாக்யஶேஷத்தைப் பூரணம் செய்து கொள்ளவேணும்]. **यद्दक्षिणाम्** [**प्रविशति तेन दाक्षिणात्यान् प्राणान् रश्मिषु सन्निधत्ते**] - தெற்குத் திக்கில் ப்ரவேஶிக்கையில் [தெற்குத் திக்கிலுள்ள இந்த்ரியங்களைப் பரிக்கிறான்]. **यत्प्रतीचीम्** - மேற்கிலும் அப்படியே; **यदुदीचीम्** - வடக்கிலும் அப்படியே; **यदधः** - கீழிலும்; **यदूर्ध्वं** - உயரவும்; **यदन्तरा दिशः** - மற்றை அந்தராள திக்குக்களிலும். **यत्सर्वम्** - எந்தக் காரணத்தால் எல்லாவற்றையும், **प्रकाशयति** - பிரகாசிப்பிக்கிறானோ, **तेन** - அந்தக் காரணத்தால், **सर्वान् प्राणान्** - எல்லா இந்த்ரியங்களையும், **रश्मिषु**- [தனது] கிரணங்களின் வழியாக, **सन्निधत्ते** - ப்ரவர்த்திப்பிக்கிறான்.

---

7. ப்ரஜைகளின் உத்பத்தியைப்பற்றிக் கேட்டதற்கு, 'பகவான் ஸ்ருஷ்டி செய்யவேண்டுமென்று ஸங்கல்பிக்கிறான். அப்பொழுது சேதந தத்வத்தையும் அசேதந தத்வத்தையும் ஸ்ருஷ்டிக்கிறான். அப்படி ஸ்ருஷ்டிக்கப்பட்ட அசேதந தத்வமும் அதன் கார்யங்களும் ஜீவன்களுக்குப் போக்ய வஸ்துக்களாகின்றன. ஜீவன்கள் அவைகளை அநுபவிக்கிறபடியால், அவர்கள் போக்தாக்களாகிறார்கள். நம்முடைய தேஹம் அதிலுள்ள இந்த்ரியங்கள் இவையெல்லாம் அசேதந தத்வத்தின் பரிணாமங்கள். இந்த ஜீவன் அதில் ப்ரவேஶித்து அவைகளில் தனது தர்ம பூத ஜ்ஞாநத்தைப் பரவச் செய்த பிறகே, அந்தத் தேஹேந்த்ரியங்களுக்குத் தம் தம் கார்யங்களில் ப்ரவர்த்திக்க யோக்யதை உண்டாகின்றது' என்று ஸமாதாநம் சொன்னார். இப்பொழுது, ஜீவனென்னும் அந்தச் சேதந தத்வமும் பரமாத்மாவால் ப்ரவேசிக்கப்பெற்றே போக்தாவாகின்றது. அதாவது:—அசேதந தத்வமாகிற இந்த்ரியாதிகளுக்குச் சேதநனாகிற ஜீவன், உள்ளில் ப்ரவேஶித்து அவைகளைக் கார்யங்களில் ப்ரவர்த்திப்பிப்பதுபோல, பரமாத்மாவானவன் ஜீவதத்வத்தின் உள்ளில் ப்ரவேஶித்து அவைகளைக் கார்யங்களில் நியமிக்கிறான்' என்று 'ஜீவன் பரப்ரஹ்மத்தைத் தனது ஆத்மாவாக உடைத்தாயிருக்கிறான்' என்பதை விவரிக்கிறார்.

[ப - ரை.] [**यः** - எந்தப் பரமாத்மா கீழில் 'ப்ரஜாபதி' என்னும் ஶப்தத்தால் ப்ரஸ்தாவிக்கப்பட்டாரோ], **स एषः** - அந்த, **वैश्वानरः**- ஸகல ப்ராணிகளையும் நயிப்பிக்கிறவனாதலால் 'வைஶ்வாநர' ஶப்தத்தால் நிர்தேஶிக்கத் தகுந்தவனாகவும், **विश्वरूपः** - விஶ்வம் முழுவதையும் தனது சரீரமாக உடையவனாகவும், **अग्निः** - உயர்ந்த ப்ராப்யத்தை ப்ராபிக்கக்கூடியவனாதலால் 'அக்நி' என்னும் ஶப்தத்திற்கு வாச்யனாகவும் [இருக்கும் பரமாத்மா], **प्राणः** - 'ப்ராண' என்னும் ஶப்தத்தால் சொல்லப்

http://acharya.org

"विश्वरूपं हरिणं जातवेदसं परायणं ज्योतिरेकं तपन्तम् । सहस्ररश्मि-
श्शतधा वर्तमानः प्राणः प्रजानामुदयत्येष सूर्यः ॥ ॥ ८ ॥

படும் போக்தாவின் ரூபத்தை அடைந்துகொண்டு, **उदयते** - உதயமாகிறான். **तदेतत्** - அந்த ப்ரஹ்மத்தைக் குறித்து, **ऋचा** - ருக் மந்த்ரத்தில், **अभ्युक्तम्** - [பின் வருமாறு] சொல்லப்பட்டிருக்கின்றது.

---

8. இது ருக். இதில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால், இம் மந்த்ரத்தின் பொருள் அவ்விடத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறபடியே தான் என்பது விளங்கும்.

[ப - ரை.] **विश्वरूपम्** - ஸகலத்தையும் தனது சரீரமாக உடைத்தாயிருக்கிறவும், **जातवेदसम्** - ஸர்வ ஜ்ஞாநத்திற்கும் உத்பாதகனுயிருக்கிறவும், **परायणम्** - எல்லாருக்கும் பரமமாக அடையக்கூடிய வஸ்துவாகவும், **ज्योतिः** - எல்லாவற்றையும் ப்ரகாஶிப்பிக்கும்படியான தீப்தியை உடைத்தாயிருக்கிறவும், **एकम्** - நிகரற்றிருக்கிறவும், **तपन्तम्** - [ஸூர்யன் முதலான ரூபங்களால் ஜகத்திற்குத் தேவையான] உஷ்ணத்தைக் கொடுத்துக்கொண்டு மிருக்கும், **हरिणम्** - 'ஹரி'யாகிற பரமாத்மாவை, **वर्तमानः** - அநுவர்த்தித்துக்கொண்டும் [அவனுல் தரிக்கப்பெற்றும் நியமிக்கப்பெற்றும் அவனுக்கு ஶேஷமாயும் இருந்துகொண்டு], **सहस्ररश्मिः**- [பல விஷயங்களைப்பற்றிய] பலவகைப்பட்ட ஜ்ஞாநத்தை உடையவனுயும், **प्रजानां प्राणः** - ஸ்தாவர ஜங்கம ரூபமாயிருக்கும் ப்ராணிகளுக்கெல்லாம் தாரகனுயும் இருந்துகொண்டும், **एष सूर्यः** - ஸூர்யன் போல் ஜ்யோதிஸ் ரூபமாயுள்ள இந்த ஜீவன், **शतधा उदयति** - பஹு ப்ரகாரமாக [ஸ்ருஷ்டி காலத்தில்] ஜநநத்தைப் பெறுகின்றுன்.

இவ்விடத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள 'வைஶ்வாநர' 'அக்நி' முதலான ஶப்தங்கள் இவ்விடத்தில் பரமாத்மாவுக்கு வாசகங்கள் என்று நமது ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிருர்கள். வைஶ்வாநராதிகரணத்தில், வைஶ்வாநர ஶப்தத்தின் பொருளை விசாரிக்குமிடத்தில், ஸ்ரீ பாஷ்யகாரர் பின்வருமாறு அநுக்ரஹித்திருக்கிருர். "**वैश्वानरशब्दस्साधारणोऽपि परमात्मासाधारणधर्मविशेषितो विश्वेषां नराणां नेतृत्वादिगुणेन परमात्मानमेवाभिदधातीति निश्चीयते**" [வைஶ்வாநர என்னும் ஶப்தம் பஞ்ச பூதங்களுள் ஒன்றுன அக்நியைக் குறிக்கும்; ப்ராணிகளின் வயிற்றிலுள்ள ஜாடராக்நியையும் குறிக்கும்; வைஶ்வாநரனென்று பெயருள்ள ஒரு தேவதா விஶேஷத்தையும் குறிக்கும்; ஸாக்ஷாத் பரமாத்மாவையும் குறிக்கும். இப்படி அது அநேக வஸ்துக்களுக்குப் பொதுவான வாசகமாக இருக்கையிலும், பரமாத்மாவுக்கு அஸாதாரணங்களான தர்மங்களால் விஶேஷிக்கப்பட்டதாயிருக்குமிடங்களில் பரமாத்மாவையே குறிக்கின்றது என்று அவயவ ஶக்தியைக்

http://acharya.org

கொண்டு நிஸ்சயம் செய்யக்கூடும். அந்த அவயவ ஸக்தி எப்படி என்றால்:—'**विश्वेषाम्नराणां नेता** 'எல்லா ப்ராணிகளுக்கும் ப்ராப்யன்' என்னும் வ்யுத்பத்தியால் அது கிடைக்கின்றது என்பது இந்தத் திவ்ய ஸூக்தி. **विश्वान् नरान् नयति** [ஸகல ப்ராணிகளையும் தன்னிடம் நயிப்பித்துக்கொள்ளுகிறான்] **इति विश्वानरः, विश्वानर एव वैश्वानरः**; 'ரக்ஷஸ்' என்னும் ஸப்தம் 'ராக்ஷஸன்' என்று மாறுவதுபோலும், 'வயஸ்' என்பது 'வாயஸம்' என்று மாறுவதுபோலும், 'விஸ்வாநர' என்பது 'வைஸ்வாநர' என்று மாறுகின்றது. 'அக்நி' என்னும் ஸப்தமும் அம்மாதிரியே அவயவ ஸக்தியால் பரமாத்மாவையே குறிக்கும். **अग्रं नयतीति अग्निः** [உத்க்ருஷ்டமான ப்ராப்யத்தை அடைவிப்பிக்கிறான்.] 'அக்ரம்' என்பது 'ப்ராப்யத்தைக் குறிக்கின்றது. அம்ருதத்வ ரூபமான பரம புருஷார்த்தத்தைப் பரமாத்மா ஒருவனே கொடுக்கத் தகுந்தவனாதலால், அவனை 'அக்நி' என்னும் பதத்தால் நிர்த்தேஸிப்பது உபபந்நமே. **जातवेदस** என்னும் ஸப்தமும் பரமாத்மாவுக்கு வாசகமாகக் கூடும். **जातानि 'वेदांसि [वेदाः] यस्मात् स जातवेदाः** [எவனிடத்திலிருந்து ஸகல ஜ்ஞாநங்களும் உத்பத்தி பெறுகின்றனவோ, அவன் 'ஜாதவேதஸ்'. **"प्रज्ञा च तस्मात् प्रसृता पुराणी"** [அவனிடமிருந்தே அந்தப் புராணமான ஜ்ஞாநம் ப்ரஸரித்தது] என்று சொல்லப்பட்டிருக்கின்றதன்றோ? ;

'**हरिणम्**' என்பதை '**हरिम्**' என்று எடுத்துக்கொண்டு அது பரமாத்மாவைக் குறிக்கின்றதென்று வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கின்றது. 'ஹரி' ஸப்தம் இ காராந்தமே; வேதமானபடியால் அது ந காராந்தமாக ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த ஸந்தர்ப்பத்தில், நமது ஆசார்யர்களால் நிர்ணயிக்கப் பெற்று அநேக ஸ்தலங்களில் ஸஞ்சாரம் செய்யப்பட்டுமுள்ள ஒரு ந்யாயத்தை நாம் தெரிந்துகொள்ளவேண்டியது ப்ராப்தம். அது என்னவென்றால்:—முதலில் ஸாமாந்யமாக ஒரு பதத்திற்கு அர்த்த நிர்ணயம் செய்யும் விஷயத்தில், அந்தப் பதத்திற்கு எது ப்ரஸித்தார்த்தமோ அதுவே ப்ரபலம்; அவயவ ஸக்தியைக்கொண்டு அந்தப் பதத்திற்கு வேறு பொருள் கொள்ளக்கூடுமானாலும், அது, "**रूढियोगमपहरति**" என்கிறபடி, துர்ப்பலமே ஆகும். ஆனால், அந்த ப்ரகரணத்தில் ரூட்யர்த்தத்திற்கு ஒத்து வராதவைகளாகவும் யௌகிகார்த்தத்திற்கு ப்ரத்யபிஜ் ஞாபகங்களாகவுமான பல ப்ரஸித்த லிங்கங்கள் தென்படும் பக்ஷத்தில் அப்பொழுது, "**प्रमाणपरिक्लृप्तो योगो रूढिमेव बाधते**" என்கிறபடி, அந்த லிங்க பரிக்லுப்தமான யோகமானது ரூடியைப் பாதித்துவிடும். இதற்கு த்ருஷ்டாந்தமாக 'ஆகாஸம்' என்னும் ஸப்தத்தை எடுத்துக்கொள் வோம். அது ஸர்வலோக ப்ரஸித்தமான பூதாகாஸத்தையே குறிக் கும். ஆனால் 'ஆகாஸமானது பராயணம்' என்று அந்த ஆகாஸத்திற்கு பரம ப்ராப்யத்வம் அந்த ப்ரகரணத்தில் சொல்லப்பட்டிருக்கும் பக்ஷத்தில்

http://acharya.org

"संवत्सरो वै प्रजापतिस्तस्यायने दक्षिणञ्चोत्तरञ्च । तद्ये ह वै तदिष्टापूर्ते कृतमित्युपासते ते चान्द्रमसमेव लोकमभिजयन्ते त एव पुनरावर्तन्ते । तस्मादेत ऋषयः प्रजाकामा दक्षिणं प्रतिपद्यन्ते । एष ह वै रयिर्यः पितृयाणः ॥ ९ ॥

அப்படிப்பட்ட பரம ப்ராப்யத்வம் பூதாகாசத்திற்கு அஸம்பாவிதமாகையால், அம்மாதிரியான இடங்களில் 'ஆகாஶ' ஶப்தத்தின் ப்ரஸித்தார்த்தத்தைப் பரித்யஜித்து, அவயவ ஶக்தியைக்கொண்டு அதற்குக் கிடைக்கும் பொருளை எடுத்துக்கொள்ளுகிறோம். 'ஆகாஶ' ஶப்தத்தின் அவயவார்த்தம், **आ-समन्तात्, काशते-प्रकाशते**, [ஸகல ப்ரதேஶத்திலும் ப்ரகாஶிக்கும் வஸ்து] என்பது. அப்படிப்பட்ட ப்ரகாஶம் பரம புருஷனுக்கே அஸாதாரணம்.

'இம்மாதிரி ஸந்தர்ப்பத்திற்குத் தக்கபடி ப்ரஸித்தார்த்தத்தை த்யஜித்து ஏதாவது ஒரு வ்யுத்பத்தியைச் செய்து அதன் பலத்தால் வேறொரு அர்த்தத்தை ஆரோபிப்பது ஒரு ந்யாயத்தின் கீழ் வருமா?' என்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். வேதாந்த வாக்யங்களுக்கு இம்மாதிரி ஒரு மார்க்கத்தைக் கல்பிப்பது அவஶ்யமே. இந்த ஆவஶ்யகதையை உணர்ந்து ஸ்ரீ வ்யாஸ பகவானே இதற்கு ஒரு வ்யவஸ்தையை விளக்கியிருக்கிறார். அது என்னவென்றால்: ஒரு ஶப்தத்திற்குப் பரமாத்மவாசகத்வத்தை இரண்டு விதமாக நிர்ணயிக்கலாம். பரம புருஷனுக்கு அஸாதாரணமாயுள்ள ஒரு குணத்தின் யோகத்தால் ஸாக்ஷாத்தாகவே அவயவ ஶக்தியைக்கொண்டு அந்த நிர்ணயத்தைச் செய்வது ஒரு ரீதி. [**साक्षादप्यविरोधं जैमिनिः**]. 'அக்நி' ஶப்தத்திற்கு 'அக்ரம் நயதி' என்னும் வ்யுத்பத்தியால் பர ப்ரஹ்ம வாசகத்வத்தை விளக்குவது இதற்கு உதாஹரணம். மற்றொன்று [**अवस्थितेरेव काशकृत्स्नः**] பரமாத்மா ஸமஸ்த ஜகத்திற்கும் அந்தராத்மாவாக இருப்பதால் அவன் ஸர்வ நிஷ்டனாகிறான். அந்தக் காரணத்தால் ஜீவவாசி ஶப்தங்களெல்லாம் பரம்பரையாகப் பரமாத்ம பரங்களாகக்கூடும் என்பதுதான். 'அப்ருதக் ஸித்த விஶேஷண வாசி ஶப்தங்களுக்கு விஶேஷ்ய பர்யந்தாபிதாந ஸாமர்த்யமுண்டு' என்னும் ந்யாயம் இதற்கு ஆதாரம். '**आत्मनस्तु कामाय. पतिः प्रियो भवति**' இத்யாதியான இடங்களில் ஜீவவாசியான ஆத்ம ஶப்தத்திற்குப் பரப்ரஹ்ம பரத்வம் சொல்வது இதற்கு உதாஹரணம். இந்த இரண்டு ந்யாயங்களும் ஸ்ரீ வ்யாஸ பகவானால் விளக்கப்பட்டு நமது ஆசார்யர்களால் பரிக்ரஹிக்கப்பட்டிருக்கின்றன.

---

9. இந்த உபநிஷத்தில் தத்வங்கள் பரோக்ஷ ரூபங்களாகப் பேசப்படுகின்றன வென்பதை, ப்ரக்ருதியையும் புருஷனையும் 'ரயி' என்றும் 'ப்ராணன்' என்றும் சொல்லியிருக்கும் ப்ரக்ரியையால் நாம் பார்த்தோம். இப்பொழுது உபாஸகர்களுடைய ஸௌகர்யத்தை உத்தேசித்து

http://acharya.org

ப்ரஹ்மத்தை அகண்டகால ரூபமாகவும் கண்டகால ருபமாகவும் பிரித்துப் பேசுகிறார். அகண்ட கால ரூபமாவது :—ஸ்ருஷ்டிக்கு முன் ஸூக்ஷ்மமாயிருக்கும் ப்ரக்ருதியையும் புருஷனையும் தனது ஶரீரமாக உடைத்தாயிருக்கும் அவஸ்தை. அந்தப் பரப்ரஹ்மம், ஸ்ருஷ்டிக்கும்பொழுது ரயி ப்ராணன் என்னும் ஶப்தங்களால் பேசக்கூடிய போக்ய வஸ்துக்களாகவும் போக்த்ரு வஸ்துக்களாகவும் பிரிகின்றது. கண்ட கால ரூபமாவது:— வர்ஷம் மாஸம் திநம் இவை பரப்ரஹ்மத்தின் கண்ட கால ரூபங்களென்று பேசப்படுகின்றன. வர்ஷம் உத்தராயண தக்ஷிணாயநங்களாகப் பிரிவது போலவும், மாஸம் க்ருஷ்ண பக்ஷ ஶுக்ல பக்ஷங்களாகப் பிரிவது போலவும், திநம் பகலாகவும் இரவாகவும் பிரிவது போலவும் பரமாத்மாவும் பிரிகிறான் என்று சொல்லலாமன்றோ? இப்படி வர்ணிப்பதால் பகவானிடமிருந்து போக்த்ரு வர்க்கமும் போக்ய வர்க்கமும் பிரிகின்றன வென்பது விளக்கப்படுவதுடன், தக்ஷிணாயந க்ருஷ்ண பக்ஷ இரவுகளைக் காட்டிலும் உத்தராயணம் ஶுக்ல பக்ஷம் பகல் இவை எப்படி உத்க்ருஷ்டங்களோ, அப்படி 'ரயி' யாகப் பேசப்படும் ஜீவன் உத்க்ருஷ்டன் என்பதும் விளக்கப்பட்டதாகின்றது.

[ப - ரை.] **संवत्सरः** - வர்ஷமானது, **प्रजापतिः** - பரஹ்ம ரூபமே. **तस्य** - அதற்கு [ஸம்வத்ஸர மென்று சொல்லப்படும் காலத்தை ரூபமாகவுடைய அந்த ப்ரஹ்மத்திற்கு], **दक्षिणश्चोत्तरश्च** - தக்ஷிண மென்றும் உத்தர மென்றும், **अयने स्तः** - இரண்டு ரூபங்கள் [ஸூர்ய கதிக்கு ஆதாரமாயுள்ள இரண்டு ரூபங்கள்], [**स्तः** - இருக்கின்றன]. **ततः** அவ்விடத்தில், **ये** - எவர்கள், **इष्टापूर्ते** - இஷ்டமாகவும் பூர்த்தமாகவும் [யாகம் முதலிய ஶ்ரௌத கர்மங்களுக்கு இஷ்டமென்று பெயர்; குளம் கிணறு வெட்டுதல் முதலிய லௌகிக ஸத் கர்மங்களுக்குப் பூர்த்தி யென்று பெயர்.] **कृतम्** - கொடுக்கப்பட்டதாக, **इति** - இவ்வாறு, **उपासते** - உபாஸிக்கிறார்களோ [அதாவது:—எவர்கள் யாகம் தாநம் வாபீ கூபம் இவைகளைச் செய்கிறார்களோ], **ते** - அவர்கள் **चन्द्रमसं लोकमेव** - சந்த்ரனுடன் ஸம்பந்தம் பெற்றுள்ள லோகத்தையே **अभिजयन्ते** அடைகிறார்கள், [சந்த்ர லோகத்தை அடைவது பித்ரு யாணத்திற்கு அடையாளம்]. **ते** - அவர்கள் **पुनरावर्तन्त एव** - மறுபடியும் [ஸம்ஸாரத்திற்குத்] திரும்பி வருகிறார்கள். **तस्मात्**-ஆகையால், **एते प्रजाकामाः ऋषयः** - இந்த அல்ப பலத்தை அபேக்ஷிக்கும் ருஷிகள் [ஒரு கர்மத்தின் பலத்தின் ஸ்வரூபத்தை அறியுமவர்களை ருஷிக ளென்று சொல்வார்கள். இவர்கள் க்ஷுத்ர பலத்தில் நோக்குள்ளவ ராயினும், பலத்தை உள்ளபடி பார்க்கிறபடியால் இவர்களும் ருஷிக ளென்று வ்யவஹரிக்கப்படுகிறார்கள்], **दक्षिणं** - தக்ஷிண மார்க்கத்தை [இந்த மார்க்கம் 'பித்ரு யாணம்' என்றும் பேசப்படும்], **प्रतिपद्यन्ते** - அடைகிறார்கள். **एष पितृयाणः**—இந்தப் பித்ரு யாணமானது, **रयिः** - அந்

http://acharya.org

" अथोत्तरेण तपसा ब्रह्मचर्येण श्रद्धया विद्ययाऽऽत्मानमन्विष्यादित्यमभि-
जयन्ते, एतद्वै प्राणानामायतनमेतदमृतमभयमेतत्परायणमेतस्मान्न पुन-रावर्तन्त
इत्येष निरोधः ।। तदेष श्लोकः ।। १० ।।

நத்தை ப்ரதாநமாக உடையது. [அதாவது: லௌகிக விஷய போகங்களால் நிறைந்தது. இந்த மார்க்கத்தால் வெளியேறுகிறவர்கள் திரும்பித் திரும்பி ஸம்ஸாரத்தை அடைந்து விஷய போகங்களையே அநுபவித்து உழலுவார்கள் என்பது தாத்பர்யம்.] 'ह वै - என்பது ப்ரஸித்தியைச் சொல்லுகின்றது.

---

10. 'அல்ப பலத்தை [ரயி என்னும் ஶப்தத்திற்கு வாச்யமானது அந்நம்; அது போக்ய வஸ்துக்களையும் குறிக்கும்] உத்தேஶித்து யாகம் தாநம் முதலியவைகளைச் செய்பவர்களின் கதியானது திரும்பத் திரும்ப ஸம்ஸாரத்தை அடைவதே' (பித்ருயாணமே) என்பதை விளக்கிவிட்டு, இனி, 'விஷய போகங்களிலிருந்து விரக்தர்களாய்ப் பரமாத்மாவையே உபாஸிக்கிறவர்கள் அம்மாதிரி பித்ருயாணம் வழியாகப் போகிறார்களில்லை; ப்ரஹ்ம ப்ராப்திக்கு த்வாரமாயிருக்கும் அர்ச்சிராதி மார்க்கத்தில் சென்று மறுபடியும் ஸம்ஸாரத்திற்கு வராததான உத்தம ஸ்தாநத்தை அடைகிறார்கள்' என்பதை விளக்குகிறார். இவ்விடத்திலும் 'ரயி' 'ப்ராணன்' இவைகளின் விபாகத்தைக் கண்டு கொள்ளவேணும். 'காம்ய கர்மங்களைச் செய்து முதல் மார்க்கத்தால் போனால் 'ரயி' என்று சொல்லப்படும் விஷய போகம் பலம்; நிஷ்காமர்களாகப் பகவானை உபாஸித்து இரண்டாவது மார்க்கத்தால் போனால் 'ப்ராண'னுக்கு ஆயதநமாக இருக்கும் பரமாத்மாவின் ப்ராப்தியே பலம் என்று அந்த விபாகம் வெளிப்படுகின்றது.

[ப - ரை.] अथ - பிறகு [இது மற்றொரு வாக்யத்தின் ஆரம்பத்தைக் காட்டுகின்றது], ये - எவர்கள், तपसा - காய க்லேஶாதிகளை லக்ஷணமாக வுடைய தபஸ்ஸைச் செய்து, ब्रह्मचर्येण - ப்ரஹ்மசர்ய வ்ரதத்துடனும், श्रद्धया - ஆஸ்திக்ய புத்தியுடனும், विद्यया - ஆத்ம வித்யையின் வழியாக, आत्मानम् - பரமாத்மாவை, अन्विष्य - தேடி, [उपासते - உபாஸிக்கிறார்களோ, ते-அவர்கள்], आदित्यम् - ஸூர்யனை, अभिजयन्ते - அடைகிறார்கள். [ஸூர்ய ஸம்பந்தியான லோகத்தை அடைவது அர்ச்சிராதி மார்க்கத்திற்கு அடையாளம்], एतद्वै - இந்த ஆத்மாதான் [கீழில் 'ப்ரஜாபதி' ஶப்தத்தால் நிர்த்திஷ்டனான பரமாத்மாவே], प्राणानाम् - ப்ராணனையுடைய ஸகல சேதநர்களுக்கும், आयतनम् - ஆதாரம். एतत् - இந்தப் பரமாத்மாவே, अमृतम्-அம்ருதம், अभयम्-நிர்ப்பயமான ஸ்தாநம்; एतत् - இதுவே, परायणम् - பரம ப்ராப்யம். एतस्मात् - இதிலிருந்து [அதாவது: இந்தப் பரமாத்மாவை அடைந்துவிட்டால் அதற்குப்பிறகு]. [उपासकाः - உபாஸகர்கள்.], पुनः - மறுபடியும், न आवर्तन्ते - திரும்புகிறார்களில்லை.

http://acharya.org

" पञ्चपादं पितरं द्वादशाकृतिं दिव आहुः परे अर्धे पुरीषिणम् ।
अथेमे अन्य उ परे विचक्षणं सप्त चक्रे षडर आहुरर्पितमिति ॥ ११ ॥

[அதாவது: மறுபடியும் ஸம்ஸாரத்திற்கு வருகிறார்களில்லை]. **एषः** - இந்தப் பரமாத்மா, **निरोधः** - [மறுபடியும் ஸம்ஸாரத்திற்கு வரவொட்டாமல்] தடுக்கிறவர். **तत्** - இதைப்பற்றி [இப்படி ஸம்வத்ஸராத்மாவாக இருக்கும் பரமாத்மாவைப்பற்றி], **एष श्लोकः** - [மேல் உதாஹரிக்கப்படப் போகும்] இந்த ஶ்லோகம்.

एष निरोधः என்னுமிடத்தில் **'एषः'** என்பது கீழே ப்ரஸ்தாவிக்கப்பட்டுள்ள 'ப்ரஜாபதி' ஶப்த வாச்யனை பரமாத்மாவைப் பராமர்ஶிக்கின்றதாகையால், '**आत्मानमन्विष्य**' என்னுமிடத்திலுள்ள '**आत्म**' ஶப்தமும் அந்த ப்ரஜாபதி பரமென்றே ஸித்திக்கின்றது. '**एतद्वै**' இத்யாதிகளில் '**एषः**' என்பதும் ப்ரஜாபதியையே பராமர்ஶிக்கிறபடியால் புல்லிங்கமாக ப்ரயோகம் இருத்தல் வேண்டுமானாலும், விதேயமாகிற 'ஆயதந' ஶப்தத்தை அபேக்ஷித்து நபும்ஸக லிங்கமாக ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது.

இவ்விடத்தில் அர்ச்சிராதி கதி ஸமக்ரமாகச் சொல்லப்படாவிடினும், மற்றை இடங்களில் அபுநராவ்ருத்தியைக் காட்டும் அர்ச்சிராதி கதியே இவ்விடத்திலும் விவக்ஷிதமென்று ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள்.

---

11. 'ப்ரஜாபதி' ஶப்த வாச்யனை பரமாத்மா ஸம்வத்ஸராத்மகனென்பதை இது விளக்குகின்றது. (1) ஸம்வத்ஸரமென்னும் காலவிஶேஷம் ஐந்து கால்களுடன் கூடியது. அவையாவன: வத்ஸரம் ஸம்வத்ஸரம் பரிவத்ஸரம் இடாவத்ஸரம் அநுவத்ஸரம் என்பவை. இவை அந்தக் காலவிஶேஷத்தின் ரூபங்களென்று ஸ்தலாந்தரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த ரூபங்கள் கால்களாக வர்ணிக்கப்படுகின்றன. வேறொரு ப்ரகாரமாகவும் இதை விளக்குவார்கள். அதாவது:— 'ருதுக்களுள் ஹேமந்த ருதுவையும் ஶிஶிர ருதுவையும் ஒன்றாகச் சேர்த்து ஒரே ருதுவாகப் பேசுவது உண்டு. அப்படிப் பார்த்தால் ஒரு வர்ஷத்தில் வஸந்தம், க்ரீஷ்மம், வர்ஷம், ஶரத், ஹேமந்த ஶிஶிரங்களாக ஐந்து ருதுக்கள் இருக்கிறபடியால் அவை கால்களாகப் பேசப்படுகின்றன' என்பதுதான். (2) அந்தக் காலவிஶேஷம் ஸகல பதார்த்தங்களுக்கும் உத்பத்தி ஸ்தாநம். (3) அது பன்னிரண்டு மாஸங்களாகிற ஆக்ருதியை உடையது. இவ்வாறு இருக்கும் அந்தக் காலம் 'த்யு' லோகத்திற்கு அப்புறத்தில் இருக்கும் 'புரீஷம்' என்று சொல்லப்படும் ப்ரஹ்மாண்ட கோளகத்தின் ஆவரணத்தைத் தனது ஸ்தாநமாக உடைத்தாயிருக்கின்றது. இவ்வாறு அதை அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். இவையெல்லாம் பரம புருஷனுக்கு அந்வயிக்குமாகையால் அவனை ஸம்வத்ஸராத்மகனென்று வர்ணிப்பது உபபந்நமே. இது ஒரு உபபத்தி.

http://acharya.org

"मासो वै प्रजापतिस्तस्य कृष्णपक्ष एव रयिः शुक्लः प्राणस्तस्मादेत ऋषयश्शुक्ल इष्टिं कुर्वन्तीतर इतरस्मिन् ॥ १२ ॥

மற்றுமொரு உபபத்தியும் இதில் சொல்லப்படுகின்றது. அது என்னவென்றால்:—ஸகல ஜகத்தும் ஸம்வத்ஸரமென்னும் ரதத்தில் நிஶ்சலமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது என்பதுதான். ஸம்வத்ஸரத்தை ரதமாக வர்ணிப்பதற்கு, ரதம் சக்ரத்துடனும் அரங்களுடனும் கூடியிருப்பது போல ஸம்வத்ஸரமும் ஸூர்யன் முதலிய ஏழு க்ரஹங்களாகிற சக்ரத்துடனும் வஸந்த ருது முதலான ஆறு ருதுக்களாகிற அரங்களுடனும் கூடியிருக்கின்றது என்பது இடம் கொடுக்கின்றது. இவ்விதம் உபபத்தி சொல்வதில் ஜகத்திற்கு ஆதாரமாயிருப்பது ஸம்வத்ஸரத்திற்கும் பரமாத்மாவுக்கும் ஸமாந தர்மமாக நன்கு அமைவதால், இந்த உபபத்தி உத்க்ருஷ்டமென்றும் இதையே காலதத்வத்தை அறிந்தவர்கள் சொல்லுகிறார்களென்றும் புகழ்ந்து பேசுகிறார். தத்வங்களை இம்மாதிரி விசித்ரமான ரூபணங்களால் வெளியிடுவது வேதத்தின் அழகு அமைந்த ரீதி.

[ப - ரை.] [ப்ரஸ்துத ஸம்வத்ஸரமானது] **पञ्चपादम्** - [வத்ஸரம் முதலிய, அல்லது வஸந்தம் முதலிய] ஐந்து கால்களை உடையதாகவும், **पितरम्** - எல்லாவற்றுக்கும் உத்பத்தி ஸ்தாநமாகவும், **द्वादशाकृतिम्** - [மாஸங்களாகிற] பன்னிரண்டு ஆகாரங்களை உடையதாகவும், **दिवः परे** - ஸ்வர்க்க லோகத்திற்கு அப்புறத்தில் இருக்கும், **अर्धे** - ஸ்தாநத்தில் [காணப்படும்], **पुरीषिणम्** - புரீஷமென்னும் அண்டாவரணத்தை இருப்பிடமாக உடைத்தாயிருப்பதாகவும், **आहुः** - [அதை அறிந்தவர்கள்] சொல்லுகிறார்கள். [ப்ரஹ்மாண்டமாகிற கோளகத்திற்கு அநேக ஆவரணங்கள் உண்டென்றும், அவைகளுள் ஸ்வர்ண பூமிக்கு ஸந்நிஹிதமாக இருக்கும் ஆவரணத்திற்குப் 'புரீஷம்' என்று பெயரென்றும் ஶாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன]. **अथ** - மேலும் [இது மற்றொரு பக்ஷத்தைக் குறிக்கிறது], **अन्ये पर इमे** - [கீழ்ச் சொல்லப்பட்டவர்களைக் காட்டிலும்] மிகச் சிறந்தவர்களான வேறு இவர்கள் [காலதத்வம் அறிந்தவர்கள்], **सप्तचक्रे** - [ஸூர்யன் முதலிய] ஏழு சக்ரத்தை உடையவும், **षडरे** - [வஸந்த ருது முதலான] ஆறு ருதுக்களை உடையவும், [**संवत्सराख्ये रथे** - ஸம்வத்ஸரமாகிற ரதத்தில்], **विचक्षणम्** - த்ருடமாக, **अ?तसिति** - [ஸகல ஜகத்தும்] ப்ரதிஷ்டிதமாக இருக்கிறதென்று, **आहुः** - சொல்லுகிறார்கள்.

---

12. பரமாத்மவை ஸம்வத்ஸராத்மகனாக வர்ணித்துவிட்டு, இப்பொழுது, அவனை மாஸாத்மகனாகப் பேசுகிறார். இதுவும் உபாஸநா ஸௌகர்யத்தை உத்தேஶித்தே சொல்லப்படுகிறது.

[ப - ரை.] **मासो वै प्रजापतिः** - ப்ரஜாபதி ஶப்தவாச்யனாகிற பரமாத்மா மாஸாத்மகன். **तस्य** - அவனுக்கு, **कृष्णपक्ष एव रयिः** - க்ருஷ்ண பக்ஷமே ரயி; ['ரயி' என்பதால் குறிக்கப்படும் போக்யமான அசேதந

http://acharya.org

" अहोरात्रो वै प्रजापतिस्तस्याहरेव प्राणो रात्रिरेव रयिः । प्राणं वा एते प्रस्कन्दन्ति ये दिवा रत्या संयुज्यन्ते । ब्रह्मचर्यमेव तद्यद्रात्रौ रत्या संयुज्यन्ते ॥

" अन्नं वै प्रजापतिस्ततो ह वै तद्रेतस्तस्मादिमाः प्रजाः प्रजायन्त इति ॥

வர்க்கம்]; **शुक्लः प्राणः** - ஶுக்லபக்ஷமே ப்ராண ஶப்தத்தால் நிர்த்தேஶிக்கப்படும் போக்தா; [அதாவது: போக்தாவாகிற சேதநவர்க்கம்]. [**यस्मात्** - எந்தக் காரணத்தால் ஶுக்லபக்ஷமாகப் பேசப்படும் ப்ராண ஸ்தாநத்தில் இருப்பதால் ஏற்றமுள்ளதோ], **तस्मात्** - அந்தக் காரணத்தால், **एते ऋषयः** - [அதீந்த்ரிய விஷயங்களை அறியும் ஶக்தி வாய்ந்துள்ள] இந்தப் பெரியோர்கள், **शुक्ले** - ஶுக்லபக்ஷத்தில், **इष्टिम्** - சுப கார்யங்களை, **कुर्वन्ति** - செய்கிறார்கள். **इतरे** - மற்றவர்கள் [அதன் ஏற்றத்தை அறியாதவர்கள்], **इतरस्मिन्** - மற்றொரு காலத்தில் [அஸாரமாயிருக்கும் க்ருஷ்ணபக்ஷத்தில்], [**इष्टिं कुर्वन्ति** - ஶுப கார்யங்களைச் செய்கிறார்கள்]. லோகத்தில் ஶுக்லபக்ஷத்தை ப்ரஶஸ்த காலமாக ஜநங்கள் கொண்டாடுவதெல்லாம் அந்தப் பக்ஷம் ப்ராண ஸ்தாநமாயிருந்து அந்தக் காரணத்தால் ஏற்றமுள்ளதாக இருப்பதால்தான்.

---

13. இதில் பரமாத்மா அஹோராத்ராத்மகனாகப் பேசப்படுகிறார். அதில் இரவைக் காட்டிலும் பகலுக்கு இருக்கும் ஏற்றம் ஒரு லௌகிக அநுஷ்டாநத்தின் நிதர்ஶநத்தால் விளக்கப்படுகின்றது.

[ப - ரை.] **अहोरात्रो वै प्रजापतिः** - பரமாத்மா அஹோராத்ராத்மகன். **तस्य** - அவனுக்கு, **अहरेव प्राणः** - பகலே ப்ராணன்; **रात्रिरेव रयिः** - ராத்ரியே ரயி. [**यस्मात् अहः प्राणः** - எந்தக் காரணத்தால் பகல் ப்ராணனோ **तस्मात्** - அந்தக் காரணத்தால்], **ये** - எவர்கள், **दिवा** - பகலில், **रत्या संयुज्यन्ते** - ஸ்த்ரீ ஸங்கமத்தைச் செய்கிறார்களோ, **एते** - அவர்கள், **प्राणं प्रस्कन्दन्ति वा** - ப்ராணனை ஶோஷணம் செய்கிறார்கள் [அதாவது - அவர்களுடைய ஆயுஸ் க்ஷயம் அடைகின்றது]. **यद्रात्रौ रत्या संयुज्यन्ते** - இரவில் அந்த ஸங்கமத்தைச் செய்வது என்பது யாதொன்று உண்டோ, **तत्** - அது, **ब्रह्मचर्यमेव** - ப்ரஹ்மசர்யமே [அதாவது - அது தோஷமன்று.]

---

14. 'இந்த வர்ணநங்களெல்லாம், பரமாத்மாவினிடமிருந்தே ப்ரஜைகள் உண்டாகின்றன [அதாவது - பரமாத்மாவையே ப்ரஜைகளுக்கு உபாதாந காரணம்] என்பதை எப்படி விளக்குகின்றன? அதுவன்றோ ப்ரஸ்துதம்?' என்பதற்கு ஸமாதாநம் சொல்லப்படுகின்றது. 'ப்ரஜாபதி' என்று சொல்லப்படும் ப்ரஹ்மமே அந்நமாகவும் அந்த அந்நத்திலிருந்து உத்பந்நமாகும் ரேதஸ்ஸாகவுமான அவஸ்தைகளை அடைகிறபடியால், எல்லா ப்ரஜைகளும் பரமாத்மாவினிடமிருந்தே உத்பத்தியை அடைகின்றன என்பது தான் அந்த ஸமாதாநம்.

http://acharya.org

"तद्ये ह तत्प्रजापतिव्रतं चरन्ति ते मिथुनमुत्पादयन्ते, तेषामेवैष ब्रह्मलोकः। येषान्तपो ब्रह्मचर्यं येषु सत्यं प्रतिष्ठितन्तेषामसौ विरजो ब्रह्मलोको न येषु जिह्ममनृतं न माया च" इति ॥ १५ ॥

इति प्रथमः प्रश्नः ॥

[ப - ரை.] **अन्नं वै प्रजापतिः** - அந்நம் பரமாத்மாவே [அதாவது:- பரமாத்மாவே 'அந்நம்' என்னும் அவஸ்தையை அடைந்திருக்கிறார்]; **ततो ह वै** - அந்த அந்நத்திலிருந்தே, **तद्रेतः** - அந்த ரேதஸ்ஸும் [உண்டாகின்றது]; [ஆகையால்] **तस्मात्** - [அந்நாவஸ்தையையும் ரேதஸ்ஸின் அவஸ்தையையும் அடைந்திருக்கும்] அந்தப் பரமாத்மாவிடமிருந்து, **इमाः प्रजाः** - இந்த ப்ரஜைகள், **प्रजायन्ते** - உண்டாகின்றார்கள். [ஆகையால் பரப்ரஹ்மமே ஜகத்திற்கு உபாதாந காரணம் என்பது ஸித்தம்.]

---

15. இவ்வாறு தத்வத்தை நிரூபித்துவிட்டு, முடிக்குமிடத்தில் புபுக்ஷுக்களாக இருக்கும் விஷய காமர்களை நிந்தித்து முமுக்ஷுக்களாயிருக்கும் ஆத்ம காமர்களைப் புகழ்ந்து பேசுகிறார்.

[ப - ரை.] **तत्** - ஆகையால், **ये** - எவர்கள், **प्रजापतिव्रतं** - ப்ரஜாபதி வ்ரதத்தை [ப்ரஜாபதி ஶப்தத்தாற் சொல்லப்படும் அந்நத்தைப் புஜிப்பதிலும் விஷய ஸுகத்தை அநுபவிப்பதிலும் நோக்குள்ளவர்களாய்] **चरन्ति** - செய்து வருகிறார்களோ; **ते** - அவர்கள், **मिथुनम्** - ப்ரஜைகளை, **उत्पादयन्ते** - உண்டுபண்ணுகிறார்கள். **एषः** - இந்த, **ब्रह्मलोकः** - [புத்ர பஶ்வாதிகளுடன்கூடிய கார்யாவஸ்தையை அடைந்திருக்கும்] ப்ரஹ்மரூபமான இந்த லோகமானது, **तेषामेव** - அவர்களுக்கே. **येषां** - எவர்களுக்கு, **तपः** - காய ஶோஷணமாகிற தபஸ்ஸும், **ब्रह्मचर्यम्** - ப்ரஹ்மசர்யமும் [இருக்கின்றனவோ], **येषु** - எவர்களிடத்தில், **सत्यम्** - ஸத்யவசநமானது, **प्रतिष्ठितम्** - நிலைபெற்று ஸ்திரமாக இருக்கின்றதோ, **येषु** - எவர்களிடத்தில், **जिह्मम्** அநார்ஜ்ஜவமும், **अनृतम्** - அஸத்யவசநமும், **न** - இல்லையோ, [**येषु** - எவர்களிடத்தில்], **माया च न** - கபட ஸ்வபாவமும் இல்லையோ, **तेषां** - அவர்களுக்கே, **असौ** - இந்த, **विरजः** - தோஷமற்றிருக்கும், **ब्रह्मलोकः** - பரப்ரஹ்மரூபமான பலம் [கிடைக்கும்.]

ब्रह्मलोकः - இந்தப் பதம் இரண்டு இடங்களில் காணப்படுகின்றது. ப்ரகரணத்தை ஒட்டி, ஒன்றில் ஒரு அர்த்த விவக்ஷையும் மற்றொன்றில் வேறு அர்த்தமும் சொல்லப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது. '**एष ब्रह्मलोकः**' என்பது முதல் ப்ரஹ்ம லோகத்தையும், **विरजो ब्रह्मलोकः** - [நிர்த்தோஷமான ப்ரஹ்மலோகம்] என்பது இரண்டாவது ப்ரஹ்ம லோகத்தையும் நிர்த்தேஶிக்கின்றன. இது இரண்டு ப்ரஹ்ம லோகங்களுக்குமுள்ள விஶேஷத்தை விளக்குகின்றது.

முதல் ப்ரஶ்நம் முற்றிற்று.

---

http://acharya.org

श्रीः

॥ प्रश्नोपनिषत् ॥

॥ द्वितीयः प्रश्नः ॥

अथ हैनं भार्गवो वैदर्भिः पप्रच्छ । “भगवन् कत्येव देवाः प्रजां विधारयन्ते ? कतर एतत् प्रकाशयन्ते ? कः पुनरेषां वरिष्ठः ?” इति ।

ஸ்ரீ:

இரண்டாவது ப்ரஸ்நம்

முதல் ப்ரஸ்நத்திற்கு ஸமாதாநமாகப் பரமாத்மாவே இந்த ப்ரஜைகளெல்லாவற்றுக்கும் உபாதாந காரணமென்பது விளக்கப்பட்டது. அந்தப் பரமாத்மாவுக்கு இந்த ப்ரஜைகளெல்லாம் ஶரீரபூதங்களென்றும் அம்மாதிரி பரமாத்மாவின் உபாஸநா ஸௌகர்யார்த்தம் அவனை அகண்ட காலாத்மகனாகவும் கண்ட காலாத்மகனாகவும் வர்ணித்து ஸமாதாநத்தை முடித்தார். இப்படி கபந்தியின் கேள்விக்கு ஸமாதாநம் சொல்லப்பட்டது. பிறகு பார்க்கவராகிற வைதர்ப்பி என்பவர் ப்ரஸ்நம் செய்கிறார். இந்த ப்ரஸ்நம் ஜீவாத்மாவின் ஸ்வரூப ஶோதநத்தைத் தாத்பர்யமாக உடையது. லோகத்தில் சில ஸாமாந்ய ஜநங்கள் தேஹத்தையே ஜீவனென்றும், மற்றும் சிலர் இந்த்ரியங்களையே ஜீவனென்றும், வேறு சிலர் மநஸ்ஸையே ஜீவனென்றும், இன்னும் வேறு சிலர் ப்ராணனையே ஜீவனென்றும் ப்ரமித்திருக்கிறார்கள். ஜீவன் என்னும் தத்வம் இவையெல்லாவற்றையும் காட்டிலும் விலக்ஷணன் என்பது இந்த ப்ரஸ்நத்தில் விளக்கப்படுகின்றது.

1. [ப - ரை.] **अथ ह** - பிறகு [கபந்தியின் ப்ரஸ்நத்திற்குப் பிறகு], **एनम्** - இவரை [பிப்பலாதரை], **भार्गवो वैदर्भिः** பார்க்கவ கோத்ரோத்பவரான விதர்ப்பருடைய குமாரர், **पप्रच्छ** - கேட்டார். “**भगवन्** - ஹே ஸ்வாமியே! **कति देवाः** - எவ்வளவு இந்த்ரியங்கள், **प्रजाम्** - ப்ரஜைகளை [ஸ்தாவரஜங்கமாத்மகமாக இருக்கும் இந்த ப்ரஜைகளை], **विधारयन्ते** - தரிக்கின்றன? [**तेषु** - அவைகளுள்], **कतरे** - எவை, **एतत्** - இதை [இந்த ஶரீரத்தை], **प्रकाशयन्ते** - ப்ரகாஶிப்பிக்கின்றன? **एषाम्** - இவைகளுக்குள், **कः पुनः** - எது, **वरिष्ठः** - ஶ்ரேஷ்டம்?

இவ்விடத்தில் மூன்று விஷயங்கள் ப்ரஸ்நம் செய்யப்பட்டிருக்கின்றன. அவையாவன:—(1) ப்ரஜைகளைத் தரிப்பது எது? (2) அவைகளை ப்ரகாஶிப்பிப்பது எது? (3) அவைகளுள் ஶ்ரேஷ்டம் எது? என்பவை. இதற்கு ஸமாதாநமாக ஒரு ஆக்யாயிகை சொல்லப்படுகின்றது.

http://acharya.org

तस्मै स होवाच "आकाशो ह वा एष देवो वायुरग्निरापः पृथिवी वाङ्मनश्चक्षुः श्रोत्रञ्च । ते प्रकाश्याभिवदन्ति 'वयमेतद्बाणमवष्टभ्य विधारयामः' ॥२॥

---

2. அந்த ஆக்யாயிகையாவது: ஒரு ஸமயத்தில், இந்தத் தேஹத்திற்கு ஆரம்பகங்களாயிருக்கும் ஆகாஶம் முதலிய ஐந்து மஹா பூதங்களும் அந்தத் தேஹத்தை ஆஶ்ரயித்து நிற்கும் இந்த்ரியங்களும் இவையெல்லாம் ஒன்று சேர்ந்து, தாம் இருக்கும் ஶரீரத்தை நோக்கி, 'இந்த ஶரீரத்தை நாம் அன்றோ தரிக்கின்றோம்?' என்று சொல்லின. இதைக் கேட்டிருந்த முக்ய ப்ராணனானது, இவைகளின் கர்வத்தை அடக்க வேணுமென்றெண்ணி, இந்தத் தேஹத்திலிருந்து கொஞ்சம் தான் வெளிக்கிளம்ப யத்நித்தது. அப்படி ப்ராணன் வெளிக்கிளம்ப ஆரம்பித்தவுடன் இந்த்ரியங்கள் முதலியவை தாம் தேஹத்தில் தங்கி நிற்கமாட்டாமல் இருந்ததைப் பார்த்து, முக்யப்ராணனுடைய மாஹாத்ம்யத்தை உணர்ந்து, அதை ஸ்தோத்ரம் செய்ய ஆரம்பித்தன. இது தான் ஆக்யாயிகை. இதன் கருத்து என்னவென்றால்: "லோகத்தில் ஸாமாந்ய ஜநங்கள் தேஹமே ஆத்மா வென்றும், இந்த்ரியங்களே ஆத்மா வென்றும், இம்மாதிரி ஆத்ம வஸ்துவைப் பற்றி ப்ரமித்திருக்கிறார்கள். இவைகளைக் காட்டிலும் அதிக ஸாமர்த்யமுடைய 'முக்ய ப்ராணன்' என்று ஒன்று உண்டு" என்பதைக் காண்பிக்கவேண்டுமென்பது தான். உண்மையில் அந்த முக்ய ப்ராணனும் தேஹத்தைத் தரிக்கவில்லை; அதைக் காட்டிலும் பரமாயும் சேதநனாயும் இருக்கும் மற்றொரு வஸ்து ஒன்று உண்டு; அது தான் ஆத்மா; அது தான் பரமாத்மாவினால் கொடுக்கப்பட்ட ஶக்தியைக் கொண்டு தேஹம் முதலியவைகளைத் தரிக்கின்றது. இதை விளக்கும் பொருட்டே, முதலில் முக்ய ப்ராணன் த்ருஷ்டாந்தமாகக் காண்பிக்கப்படுகின்றது.

[ப - ரை.] **तस्मै** - அவனுக்கு [அந்த வைதர்ப்பிக்கு], **सः** - அவர் [பிப்பலாதர்], **उवाच ह** - சொன்னார். **आकाशः** - ஆகாசம், **देवो वायुः** - எப்பொழுதும் சலித்துக்கொண்டிருக்கும் வாயு, **अग्निः** - தேஜஸ், **आपः** - ஜலம், **पृथिवी** - பூமி, **वाक्** - வாக் [வாக் முதலிய கர்மேந்த்ரியங்கள்], **मनः** - மநஸ், **चक्षुः** - கண், **श्रोत्रम् च** - காது [இவை முதலிய ஜ்ஞாநேந்த்ரியங்கள்], **ते** - இவையெல்லாம், **प्रकाश्य** - [ஶரீரத்தைக்] காண்பித்துக் கொண்டு, **अभिवदन्ति** - அதைச் சுற்றி நிற்பவைகளாய்ச் சொன்னதாவது, '**बाणम्** - பாணம்போல ஸஞ்சரிக்கும் ஶீலமுடைய, **एतत्** - இதை [இந்த ஶரீரத்தை], **अवष्टभ्य** - நிலைநிறுத்தி, **विधारयामः** - [நாமே] தரிக்கின்றோம்' **ह वा** - [இது ப்ரஸித்தியைக் குறிக்கின்றது].

देवः - இது 'வாயு' என்பதற்கு விஶேஷணம். **दीव्यतीति देवः** [சலிக்கும் ஶீலமுடையதால் 'தேவன்' என்று சொல்லப்படுகின்றது.] அல்லது: கீழே '**कत्येव देवाः**' என்று கேட்குமிடத்திற்போல, இவ்விடத்

ஈ — 5

http://acharya.org

तान्वरिष्ठः प्राण उवाच 'मा मोहमापद्यथ । अहमेवैतत् पञ्चधाऽऽत्मानं प्रविभज्यैतद्बाणमवष्टभ्य विधारयामि ' इति ॥ ३ ॥

तेऽश्रद्दधाना बभूवुः । सोऽभिमानादूर्ध्वमुत्क्रामत इव । तस्मिन्नुत्क्रामत्यथेतरे सर्व एवोत्क्रामन्ते । तस्मिंश्च प्रतिष्ठमाने सर्व एव प्रतिष्ठन्ते । तद्यथा मक्षिका मधुकरराजानमुत्क्रामन्तं सर्व एवोत्क्रामन्ते, तस्मिंश्च प्रतिष्ठमाने सर्वा एव प्रातिष्ठन्त, एवं वाङ्मनश्चक्षुःश्रोत्रश्च । ते प्रीताः प्राणँ स्तुवन्ति ॥ ४ ॥

திலுள்ள 'தேவ ஶப்தத்தை ஆகாஶம் முதலிய எல்லாவற்றுக்கும் விஶேஷணமாகவும் எடுத்துக்கொள்ளலாம். 'தேவ' என்னும் ஶப்தம் இந்த்ரியங்களேயும் குறிக்கும்.

---

3. [ப-ரை.] **वरिष्ठः** - [மற்றை எல்லாரையும் காட்டிலும்] ஶ்ரேஷ்டமான, **प्राणः** - முக்ய ப்ராணன், **तान्** - அவர்களே [அந்த ஆகாஶம் முதலியவைகளே நோக்கி], **उवाच** - சொல்லிற்று. '[ஹே ஆகாஶாதிகளே], **मोहम्** - மோஹத்தை, **मा आपद्यथ** - அடையாதேயுங்கள். **एतत्** - இதை [இந்தச் சரீரத்தை], **अहमेव** - நானே, **आत्मानम्** - என்னே, **पञ्चधा** - ஐந்து பாகமாக. **प्रविभज्य** - பிரித்துக்கொண்டு, **एतद्बाणमवष्टभ्य विधारयामि** - பாணம் போன்ற இந்த ஶரீரத்தை நிலைநிறுத்தித் தரிக்கின்றேன்,' **इति** - என்று.

पञ्चधा - ப்ராணன் என்பது நமது தேஹத்தில், ப்ராண, அபாந, வ்யாந, உதாந, ஸமாந என்று ஐந்தாகப் பிரிந்து எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கின்றதன்றோ? 'முக்ய ப்ராணன்' என்பதும் இந்த்ரியம் போல் ஒரு அசேதந வஸ்துவே. அது கண் காது முதலியவற்றைக் காட்டிலும் வேறுபட்டதென்பது, நாம் தூங்கும் காலத்தில் நடப்பதைப் பார்த்தால் தெரியும். தூங்கும்பொழுது நமது கண் காது முதலியவையெல்லாம் உபரதங்களாயிருக்கையில், ப்ராணன் மாத்ரம் ஓடிக்கொண்டிருக்கின்றதன்றோ?

---

4. [ப-ரை.] **ते** - அவைகள் [அந்த இந்த்ரியங்கள் முதலியவை], **अश्रद्दधाना बभूवुः** - [இதை] நம்பாதவர்களாக இருந்தார்கள். **सः** - அந்த ப்ராணன், **अभिमानात्** - அஹங்காராவேஶத்தால், **ऊर्ध्वम्** - உயர [தனது ஸ்தாநமாகிற தேஹத்திலிருந்து], **उत्क्रामत इव** - கொஞ்சம் வெளிப் புறப்படுவதுபோல பாவித்தது. **तस्मिन्** - அந்த ப்ராணன், **उत्क्रामति** - கிளம்பும்பொழுது, **अथ** - அப்பொழுதே, **इतरे सर्व एव** - மற்றை [ஆகாஶம் முதலியவை] எல்லாம், **उत्क्रामन्ते** - கிளம்பின; **तस्मिंश्च प्रतिष्ठमाने** - அது திரும்பி வந்தவுடன், **सर्व एव प्रतिष्ठन्ते** - அவைகளும் திரும்பி வந்தன. **तत्** - இது, **मक्षिकाः** - [அல்ப] கொசுக்கள், **मधुकरराजानम्** - தமக்கு அர

http://acharya.org

'एषोऽग्निस्तपति ; एष सूर्यः ; एष पर्जन्यो मघवान् ; एष वायुः । एष पृथिवी रयिर्देवः सदसच्चामृतश्च यत् ॥ ५ ॥

'अरा इव रथनाभौ प्राणे सर्वं प्रतिष्ठितम् । ऋचो यजूंषि सामानि यज्ञः क्षत्रं ब्रह्म च ॥ ६ ॥

சன்போன்ற பெரிய வண்டை, **उत्क्रामन्तम्** - அது வெளிக் கிளம்புகையில் **सर्वा एवोत्क्रामन्ते** - தாமும் கிளம்பி, **तस्मिंश्च प्रतिष्ठमाने** - அது திரும்பவே, **यथा सर्वा एव प्रातिष्ठन्त** - எப்படித் திரும்பி வருகின்றனவோ, **एवं** - அம் மாதிரியே [இருந்தது] **ते वाङ्मनश्चक्षुःश्रोत्रञ्च** - [அப்பொழுது] அந்த வாக் முதலியவையெல்லாம், **प्रीताः** - [முக்ய ப்ராணனுடைய மாஹாத்ம்யத்தைப் பார்த்து] ஸந்தோஷம் அடைந்தவைகளாய், **प्राणम्** - முக்ய ப்ராணனை, **स्तुवन्ति** - ஸ்தோத்ரம் செய்தன.

---

5. இது முதல் இந்த ப்ரஶ்நம் முடியும் பர்யந்தம் இவை செய்யும் ஸ்தோத்ரமே. இந்த ஸ்தோத்ரத்தில் ப்ராணனை ஸூர்யனென்றும் சந்த்ரனென்றும் ஸத்தென்றும் அஸத்தென்றும் மோக்ஷமென்றும் இம்மாதிரி அதிவாதமாக அந்த இந்த்ரியங்கள் புகழ்வதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இதன் தாத்பர்ய மென்னவென்றால்: ஸூர்யன் முதலானவர்களுடைய குணங்களில் சிற்சில அம்ஶங்கள் ப்ராணனிடத்தில் காணப்படுகின்றன என்பதுதான்.

[ப - ரை.] **एषः** - இந்த முக்ய ப்ராணன், **अग्निः** - அக்நி ரூபமாக; **तपति** - தபிக்கிறார். **एषः** - இவர், **सूर्यः** - ஸூர்யனே. **एषः** - இவர், **पर्जन्यः** - மேகம்; **एषः** - இவர், **मघवान्** - இந்த்ரன் **एषः** - இவர், **वायुः** - வாயு. **एषः** - இவர், **पृथिवी** - பூமி. **एषः** - இவர், **रयिः** - ஜலமயமான, **देवः** - தேவன் [அதாவது சந்த்ரன்]. **एषः** - இவர், **सत्** - சேதந வஸ்து; **एषः** - இவரே, **असत्**- அசேதந வஸ்துவும். **अमृतमिति यत्**-மோக்ஷமென்று யாதொன்று உண்டோ, [**तत्**] **च** - அதுவும், **एषः** - இவரே.

---

6. [ப - ரை.] **रथनाभौ** - சக்ரத்தின் 'குடம்' என்று சொல்லப்படும் நாபியில், **अरा इव** - 'அரம்' என்று சொல்லப்படும் கால்கள்போல, **सर्वम्** - எல்லாம், **प्रतिष्ठितम्** - நிறுத்தப்பட்டிருக்கின்றது. [எதெல்லாம் என்றால்] **ऋचः** - ருக் வேதம், **यजूंषि** - யஜுர் வேதம், **सामानि** - ஸாம வேதம், **यज्ञः** - யஜ்ஞம், **ब्रह्म च क्षत्रञ्च** - ஸ்தாவர ஜங்கமாத்மகமான ஸகல ப்ராணிகளும் [இவையெல்லாம் ப்ராணனாலேயே தரிக்கப்பட்டிருக்கின்றன]. வண்டிச் சக்ரத்தில் நடுவில் குடம், அதில் புதைக்கப்பட்டிருக்கும் அரக்கால்கள், அந்தக் கால்களின் வெளிமுனையில் கூர்வாங்கிக் கோக்கப்பட்டிருக்கும் வட்டை [நேமி] என்னும் சுற்றியிருக்கும் மரம், ஆக மூன்று பாகங்கள் உண்டு. இவ்விடத்தில் குடத்திற்கு ஸமாநமாக ப்ராண

http://acharya.org

'प्रजापतिश्चाऽसि गर्भे त्वमेव प्रतिजायसे । तुभ्यं प्राण प्रजास्त्विमा बलिं हरन्ति यः प्राणैः प्रतितिष्ठसि ॥ ७ ॥

'देवानामसि वह्नितमः पितॄणां प्रथमा स्वधा । ऋषीणाञ्चरितं सत्यमथर्वाङ्गिरसामसि ॥ ८ ॥

னும், அரங்களுக்கு ஸமாநமாக ஸகல வஸ்துக்களும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. அரங்கள் குடத்தில் தாங்கி நிற்பது போல் ஸகல வஸ்துக்களும் ப்ராணனில் தாங்கி நிற்கின்றன என்பது கருத்து. மற்றோர் உபநிஷத், அசேதந வஸ்துக்கள் சேதநனாகிற ஜீவனால் தாங்கப்பட்டிருப்பதையும், அந்த ஜீவன்கள் பரமாத்மாவால் நிலைபெற்று நிற்பதையும் இந்த உபமையைக்கொண்டே பேசுகின்றது. "**तद्यथाऽरेषु नेमिरर्पिता, नाभावरा अर्पिताः एवमेवैता भूतमात्राः प्रज्ञामात्रास्वर्पिताः प्रज्ञामात्राः प्राणेऽर्पिताः**" [எப்படி அரக்கால்களில் வட்டையும், அரக்கால்கள் நேமி என்னும் குடத்திலும் நிறுத்தப்பட்டு நிற்கின்றனவோ, அப்படியே அசேதந வஸ்துக்கள் ஜீவன்களிலும், ஜீவன்கள் பரமாத்மாவினிடத்திலும் நிலைபெற்றிருக்கின்றன]. இந்த வாக்யத்தில் காணப்படும் 'ப்ராணன்' என்னும் ஶப்தம் பரமாத்மாவைக் குறிக்கின்றது.

---

7. இதுபர்யந்தம் ப்ராணனைப் பார்த்து நேரில் ஸ்தோத்ரம் செய்யாமல் 'இவர்' என்று படர்க்கையாகக் குறித்து ஸ்தோத்ரம் செய்தார்கள். இதில் நேரில் ப்ராணனைப் பார்த்து நேரிலேயே முன்னிலையாகப் பேசுகிறார்கள்.

[ப - ரை.] **हे प्राण** - ஹே ப்ராணனே! [**त्वं** - நீ] **गर्भे** - கர்ப்பத்தில் **प्रजापतिः** - ப்ரஜைகளை [ப்ராணன் அபாநம் முதலிய ரூபமாக இருந்து] ரக்ஷித்துக்கொண்டு, **चरसि** - ஸஞ்சரிக்கிறாய். **त्वमेव** - நீயே, **प्रतिजायसे** - [புத்ராதி ரூபமாக] உண்டாகிறாய். **तुभ्यम्** - உனக்காகவே, **इमाः प्रजाः** - இந்த ப்ரஜைகளெல்லாம், **बलिं** - அந்நம் முதலியவற்றை, **हरन्ति** - ஸமர்ப்பிக்கிறார்கள். [ஏனென்றால்] **यः** - யாதொரு [நீ], **प्राणैः** - ப்ராணநம் முதலிய வ்யாபாரங்களால், **प्रतितिष्ठसि** - [ஸகல ப்ரஜைகளிடத்திலும்] ப்ரதிஷ்டிதமாய் இருக்கிறாயோ.

---

8. [**त्वम्** - நீ], **देवानां** - தேவர்களுக்கு, **वह्नितमः** - ஹவிஸ்ஸைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதில் ப்ரதாநனாக, **असि** - இருக்கிறாய். **पितॄणाम्** - பித்ருக்களுக்கு, **प्रथमा स्वधा असि** - முக்யமாக ப்ரீதி செய்கிறாய். **अथर्वाङ्गि-रसां** - அதர்வாங்கிரஸ் முதலிய, **ऋषीणाम्** - ருஷிகளுக்கு, **सत्यम्** - உயர்ந்த **चरितम्** - அநுஷ்டாநமாக, **असि** - இருக்கிறாய். அதாவது: ருஷிகளுக்கு ப்ரீதிகரமான நித்ய நைமித்திக ரூபங்களான கர்மங்களை நீயே செய்விக்கிறாய்.

http://acharya.org

'इन्द्रस्त्वं प्राण ; तेजसा रुद्रोऽसि परिरक्षिता । त्वमन्तरिक्षे चरसि ; सूर्यस्त्वं ज्योतिषां पतिः ॥ ९ ॥

'यदा त्वमभिवर्षस्यथेमाः प्राणते प्रजाः । आनन्दरूपास्तिष्ठन्ति कामायान्नं भविष्यतीति ॥ १० ॥

'व्रात्यस्त्वं प्राण, एकर्षिरत्ता विश्वस्य सत्पतिः । वयमाद्यस्य दातारः पिता त्वं मातरिश्व नः ॥ ११ ॥

'या ते तनूर्वाचि प्रतिष्ठिता या श्रोत्रे या च चक्षुषि या च मनसि सन्तता शिवान्तां कुरु । मोत्क्रमीः ॥ १२ ॥

---

9. [ப - ரை]. **हे प्राण** - ஹே ப்ராணனே ! **त्वमिन्द्रः** - நீ தான் பரமேச்வரன் : **तेजसा** - [ஸம்ஹரிக்கும்] தேஜஸ்ஸினால், **रुद्रोऽसि** - ருத்ரனாக இருக்கிறாய் ; **परिरक्षिता** - [சரியான காலம் வரும்பொழுது] ரக்ஷகனாகவும் இருக்கிறாய். **त्वम्** - நீ, **ज्योतिषां** - ப்ரகாசங்களாக இருக்கும் ஜ்யோதிஸ்ஸுக்களுக்கெல்லாம், **पतिः** - ச்ரேஷ்டனை, **सूर्यः** - ஸூர்யனாக இருந்துகொண்டு, **अन्तरिक्षे** - ஆகாசத்தில், **चरसि** - ஸஞ்சரிக்கிறாய்.

---

10. [ப - ரை]. **प्राण** - ஹே ப்ராணனே ! **यदा** - எப்பொழுது, **त्वम्** - நீ, **अभिवर्षसि** - [மேகமாக இருந்துகொண்டு] மழை பெய்கிறாயோ, [**तदा** - அப்பொழுது], **ते** - உன்னுடைய, **इमाः प्रजाः** - இந்த ப்ரஜைகளெல்லாம், **कामाय अन्नं भविष्यतीति** - யதேஷ்டம் அந்நம் கிடைக்குமென்று, **आनन्दरूपाः** - ஆநந்தத்துடன் கூடினவர்களாக, **तिष्ठन्ति** - ஆகிறார்கள்.

---

11. [ப - ரை]. **प्राण** - ஹே ப்ராணனே, **त्वम्** - நீ, **व्रात्यः** - ஸம்ஸ்கார மொன்றும் பெறாமல் இருக்கும் ப்ராஹ்மணனாகவும் இருக்கிறாய் ; **एकर्षिः** - முக்யமான மந்த்ர த்ரஷ்டாவும் [நீயே]. **विश्वस्य** - ஜகத்திற்கு, **अत्ता** - ஸம்ஹர்த்தாவாகவும் இருக்கிறாய் ; **सत्पतिः** - [முக்யமாக] ஸாது ஜநங்களெல்லாருக்கும் ரக்ஷகனாகவும் இருக்கிறாய். [**ते** - உனக்கு], **वयम्** - நாங்கள், **आद्यस्य** - சாப்பிடத் தகுந்த [அல்லது அநுபவிக்கத் தகுந்த] வஸ்துக்களின், **दातारः** - கொடுப்பவர்களாக இருக்கிறோம். **मातरिश्व** - ஹே வாயுவே ! **नः** - எங்களுக்கு, **त्वम्** - நீ, **पिताअसि** - போஷகனாயும் இருக்கிறாய்.

मातरिश्वन् இருக்கவேண்டியதற்கு, **मातरिश्व** என்று இருப்பது வைதிக ப்ரயோகம்.

---

12. [ப - ரை]. **वाचि** - வாக்கினில், **या ते तनूः** - யாதொரு உன்னுடைய ஸூக்ஷ்மரூபமான ஶக்தியானது, **प्रतिष्ठिता** - நிலைபெற்று நிற்கின்றதோ, [அதாவது : வாக்கை நியமிக்கும் அநுகூலமான ஶக்தி யாது

http://acharya.org

'प्राणस्येदं वशे सर्वं त्रिदिवे यत्प्रतिष्ठितम् । मातेव पुत्रान् रक्षस्व श्रीश्च प्रज्ञां च धेहि नः' ॥ १३ ॥

॥ इति द्वितीयः प्रश्नः ॥

ஒன்று உன்னிடம் இருக்கின்றதோ], **या श्रोत्रे** - யாதொன்று காதிலும், **या च चक्षुषि** - யாதொன்று கண்ணிலும், **या च मनसि** - யாதொன்று மநஸ்ஸிலும், **सन्तता [प्रतिष्ठिता]** - எப்பொழுதும் ப்ரதிஷ்டிதமாக இருக்கின்றதோ, **ताम्** - அந்த ஶக்தியை, **शिवाम्** - மங்களகரமாக, **कुरु** - செய், **मा उत्क्रामीः** - [தேஹத்தைவிட்டு] வெளியில் போகும் ப்ரயத்நத்தை நிறுத்திவிடு.

---

13. [ப - ரை]. **इदं सर्वम्** - இந்த ஜகத் முழுவதும், **प्राणस्य वशे** ப்ராணனுகிற [உன்னுடைய] வஶத்தில் இருக்கின்றது. [அதாவது: உன் அதீநம்]. **यत् त्रिदिवे प्रतिष्ठितम्** - ஸ்வர்க்கம் முதலான லோகங்களில் எது எது இருக்கின்றதோ [அதுவும் உன் அதீநமே]. [ஆகையால்] **पुत्रान् मातेव** - குழந்தைகளைத் தாய் போல, **रक्षस्व** - [எங்களை] ரக்ஷிக்கவேண்டும். **नः** - எங்களுக்கு, **श्रीश्च** - ஸ்வ ஸ்வ கார்யங்களை நிர்வஹிக்கும் ஸாமர்த்யரூபமான ஶ்ரீயையும், **प्रज्ञाञ्च** - [அதற்கு அநுகூலமான] ப்ரஜ்ஞையையும், **धेहि** - செய்து கொடு. இவ்விடத்தில் '**श्रीः**' என்னும் முதல் வேற்றுமை, '**श्रियम्**' என்னும் இரண்டாம் வேற்றுமையின் அர்த்தத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது.

இரண்டாவது ப்ரஶ்நம் முற்றிற்று.

---

http://acharya.org

॥ श्रीः ॥

॥ प्रश्नोपनिषत् ॥

॥ तृतीयः प्रश्नः ॥

अथ हैनं कौसल्यश्चाश्वलायनः पप्रच्छ । "भगवन्! कुत एष प्राणो जायते? कथमायात्यस्मिन् शरीरे? आत्मानं वा प्रविभज्य कथं प्रातिष्ठते? केनोत्क्रमते? कथं बाह्यमभिधत्ते? कथमध्यात्मम्?" इति ॥ १ ॥

ஸ்ரீ:

மூன்றாவது ப்ரஶ்நம்

கீழ் ப்ரஶ்நத்தில் 'இந்த லோகத்திலும் ஸ்வர்க்க லோகத்திலும் எவை எவை ப்ரதிஷ்டிதங்களாக இருக்கின்றனவோ அவையெல்லாம் ப்ராணாதீநங்களாகவே இருக்கின்றன [**प्राणस्येदं वशं सर्वं त्रिदिवे यत्प्रतिष्ठितम्**] என்பது விளக்கப்பட்டது. அந்த ப்ராணனுடைய உத்பத்தியையும், அது ஶரீரத்தினுள் ப்ரவேஶிக்கும் ப்ரகாரத்தையும், அது ஶரீரத்தில் இருக்கும் காலத்தில் அது தன்னை விபாகித்துக்கொண்டு நிற்கும் ப்ரகாரத்தையும், அது ஶரீரத்தை விட்டு விலகும் மார்க்கத்தையும், அதன் வெளிப்பட்ட ரூபத்தையும், அதன் உள்பட்ட ரூபத்தையும் இவையெல்லாவற்றையும் இந்த ப்ரஶ்நம் விவரிக்கின்றது. இப்படி ப்ராணனைப் பற்றிய விஶேஷங்களை அறிந்து, அதிலிருந்து பரிஶுத்த ப்ரத்யகாத்மாவின் ஸ்வரூபத்தை உணர்ந்து, அது வழியாக ப்ரஹ்மோபாஸநத்தை நிறைவேற்றி மோக்ஷத்தைப் பெறக்கூடும் என்பதை விளக்குவதே இந்த ப்ரஶ்நத்தின் தாத்பர்யம்.

1. [ப-ரை.] **अथ ह एनम्** - அந்தப் பிப்பலாதரை, **आश्वलायनः कौसल्यः** - அஶ்வலாயநருடைய புத்ரராகிய கௌஸல்யர், **पप्रच्छ** - கேட்டார். "**भगवन्** - ஹே பகவன், **एष प्राणः** - இந்த ப்ராணன், **कुतः** - எதிலிருந்து, **जायते** - உண்டாகிறது? **अस्मिन् शरीरे** - இந்த ஶரீரத்தில், **कथमायाति** - எப்படி வருகின்றது? **आत्मानं** - தன்னை, **कथं विभज्य प्रातिष्ठते** எப்படி விபாகித்துக்கொண்டு நிற்கின்றது? **केन उत्क्रामते** - எப்படி வெளிப்புறப்படுகின்றது? **कथं बाह्यमभिधत्ते** - எந்த வெளிப்பட்ட ரூபத்துடன் ஸந்நிஹிதமாயிருக்கின்றது? **कथमध्यात्मम्** [**अभिधत्ते**] - எவ்விதமான ஆந்தர ரூபத்துடன் நிற்கின்றது?" **इति** - என்று.

---

http://acharya.org

तस्मै स होवाच । "अतिप्रश्नान् पृच्छसि । ब्रह्मिष्ठोऽसि इति तस्मात्तेऽहं ब्रवीमि ॥ २ ॥

"आत्मन एष प्राणो जायते । यथैषा पुरुषे छाया, एतस्मिन्नेतदाततं मनोऽकृतेनायात्यस्मिन् शरीरे ॥ ३ ॥

यथा सम्राडेवाधिकृतान्विनियुङ्क्ते एतान् ग्रामानेतान् ग्रामानधितिष्ठस्व' इति । एवमेवैष प्राण इतरान् प्राणान् पृथक् पृथगेव सन्निधत्ते ॥ ४ ॥

---

2. [ப - ரை.] **स ह** - அந்தப் பிப்பலாதர், **तस्मै उवाच** - அவனுக்கு மறுமொழி சொன்னதாவது: "[**त्वम्** - நீ], **अतिप्रश्नान्** - ப்ரஶ்நத்திற்குத் தகாதவைகளை [அதாவது - ரஹஸ்யார்த்தங்களை], **पृच्छसि** - கேட்கிறாய். **ब्रह्मिष्ठोऽसि** - நீ ப்ரஹ்மவித்தென்றே [நினைக்கின்றேன்]. **तस्मात्** - ஆகையால், **ते** - உனக்கு, **अहम्** - நான், **ब्रवीमि** - சொல்லுகிறேன்.

3. **एष प्राणः** - இந்த ப்ராணன், **आत्मनो जायते** - பரமாத்மாவிடமிருந்தே உத்பத்தி பெறுகின்றது. [இது முதல் கேள்விக்கு ஸமாதாநம். மற்றோரிடத்தில் இம்மாதிரியே சொல்லப்பட்டிருக்கின்றது. **एतस्माज्जायते प्राणः** - இந்த வாக்யத்தில் **एतस्मात्** (இதனிடமிருந்து) என்பது பரமாத்மாவையே குறிக்கின்றது என்பது ப்ரகரணத்திலிருந்து விளங்கும்]. இதற்கு மேல் இரண்டாவது ப்ரஶ்நத்திற்கு ஸமாதாநம். **यथा एषा पुरुषे छाया** - எப்படிப் புருஷனிடம் நிழலோ [அதாவது - எப்படிப் புருஷனுடனே நிழலானது வேறு ஸாமக்ரியின் ஸஹாயமின்றிக்கே போகின்றதோ], [**यथा** - எப்படி] **एतस्मिन्** - புருஷனிடத்தில், **एतत्** - இந்த, **मनः** - மநஸ்ஸானது, **अकृतेन** - ஒருவித யத்நமுமின்றிக்கே **आततम्** - [பிரியாமல்] சேர்ந்திருக்கின்றதோ, [**एवम्** - அப்படியே, **प्राणोऽपि** - ப்ராணனும், **अकृतेन** - பிரியாமலே], **अस्मिन् शरीरे** - இந்த ஶரீரத்தில், **आयाति** - வருகின்றான். [மநஸ்ஸும் ப்ராணனும் ஜீவனுடன் கூடவே ஶரீரத்தில் ப்ரவேஶிக்கின்றன. ஆகையால் ஜீவன் ஶரீரத்தை விட்டு விலகினால் ப்ராணனும் அவனுடன் விலகிவிடும்; ப்ராணன் விலகுவதற்கு வேறு ஒரு காரணமும் தேவையில்லை. மநஸ்ஸும் அப்படியே.]

4. [ப - ரை.] மூன்றாவது கேள்விக்கு ஸமாதாநம் சொல்லப்படுகின்றது. **यथा** - எப்படி, **सम्राट्** - ஒரு சக்ரவர்த்தி, **कार्येषु अधिकृतान्** - கார்யங்களில் நியமிக்கப்பட்டிருப்பவர்களை [அதாவது: தனது ஸேவகர்களை], '**इमान् ग्रामानधितिष्ठस्व, इमान् ग्रामानधितिष्ठस्व** - இந்த க்ராமங்களை நீ பார்த்துக் கொள், இந்த க்ராமங்களை நீ பார்த்துக் கொள்', **इति** - என்று, **विनियुङ्क्ते** - நியமிக்கிறானோ, **एवमेव** - அப்படியே, **एष प्राणः** - இந்த ப்ராணன், **इतरान् प्राणान्** - மற்றை ப்ராணன்களை, **पृथक् पृथगेव**-

http://acharya.org

पायूपस्थेऽपानम्; चक्षुःश्रोत्रे मुखनासिकाभ्यां प्राणः स्वयं प्रतिष्ठते; मध्ये तु समानः, एष ह्येतद्धुतमन्नं समं नयति, तस्मादेतास्सप्तार्चिषो भवन्ति ॥ ५॥

हृदि ह्येष आत्मा। अत्रैतदेकशतं नाडीनाम्। तासां शतं शतमेकैकस्याम्। द्वासप्ततिर्द्वासप्ततिः प्रतिशाखानाडीसहस्राणि भवन्ति। आसु व्यानश्चरति ॥ ६॥

தனித்தனியாக விநியோகித்து, **सन्निधत्ते** [க்ராமஸ்தாநீயமான தனது அம்சமாகிற அபாநம் வ்யாநம் முதலியவைகளின் வழியாக] அதிஷ்டாநம் செய்கிறது.

---

5. [ப-ரை.] **पायूपस्थे** - பாயு உபஸ்தம் இந்த விடங்களில், **अपानम्** - [மூத்ர புரீஷங்களை வெளிப்படுத்திக்கொண்டு] அபாநவாயு ரூபமாக, [**प्रातिष्ठते** - அதிஷ்டாநம் செய்துகொண்டிருக்கிறது.] **चक्षुःश्रोत्रे** - கண்களிலும் காதுகளிலும், **मुखनासिकाभ्याम्** - முகத்திலிருந்தும் மூக்கிலிருந்தும் வெளிப்பட்டுக்கொண்டு, **प्राणः** - ப்ராணவாயு ரூபமாக, **स्वयम्** தானே, **प्रातिष्ठते** - அதிஷ்டித்து நிற்கின்றது. **मध्ये तु** - நடுவிலோ வென்றால், **समानः** - ஸமாந வாயு ரூபமாக நிற்கின்றது. **एष हि** இதுவே, **एतत् हुतमन्नम्** - புஜிக்கப்படும் இந்த அந்நம் முதலியவைகளை, **समं नयति** - [ஏழு தாதுக்களாகப் பிரித்து] ஸமமாகச் செய்கின்றது. **तस्मात्** - அதிலிருந்து **सप्त अर्चिषः** - [காளீ கராளீ முதலான] ஏழு ஜ்வாலைகள், **भवन्ति** - உண்டாகின்றன.

---

6. [ப-ரை.] **एष आत्मा** ஜீவாத்மா, **हृदि हि**-ஹ்ருதயத்திலன்றோ [ஸமாந ரூபமான வாயு எவ்விடத்தில் ஸஞ்சரிக்கிறதோ அவ்விடத்தில்], இருக்கிறான். **अत्र** - அந்த இடத்தில், **एतत् नाडीनां एकशतं** [**वर्तते**] - நூற்றொரு நாடிகள் இருக்கின்றன. **तासां** - அந்த [நூற்றொரு] நாடிகளுள், **एकैकस्याम्** - ஒவ்வொன்றிலும், **शतं शतम्** - நூறு நூறு நாடிகள் உண்டு. [அதாவது: 100 × 101 [பதினாயிரத்து நூறு]. [**पुनरपि**] **द्वासप्ततिः द्वासप्ततिः प्रतिनाडीसहस्राणि** - [மறுபடியும் இந்தப் பதினாயிரத்து நூற்றினுள் ஒவ்வொன்றிலும்] எழுபத்திரண்டாயிரம் ப்ரதிநாடிகள் [அதாவது: 72000 × 10100 = 727200000, எழுபத்திரண்டு கோடியே எழுபத்திரண்டு லக்ஷம் கிளைகளாகப் பிரிந்து தேஹம் முழுவதும் ஓடி நிற்கின்றன], **भवन्ति** - இருக்கின்றன. **आसु** - இந்த நாடிகளில், **व्यानः** - வ்யாந ரூபமான வாயுவானது, **चरति** - ஸஞ்சரிக்கின்றது,

प्रतिशाखाः-शाखाभ्यो निर्गता अल्पशाखाः [முக்ய கிளைகளிலிருந்து வெளிப்படும் உப கிளைகளுக்கு 'ப்ரதிசாகைகள்' என்று பெயர்].

---

http://acharya.org

अथैकयोर्ध्व उदानः पुण्येन पुण्यं लोकन्नयति पापेन पापम् उभाभ्यामेव मनुष्यलोकम् ॥ ७ ॥

आदित्यो ह वै बाह्यः प्राणः; उदयत्येष ह्येनं चाक्षुषं प्राणमनुगृह्णानः; पृथिव्यां या देवता सैषा पुरुषस्यापानमवष्टभ्य। अन्तरा यदाकाशस्स समानः। वायुर्व्यानः ॥ ८ ॥

---

7. [ப-ரை.] **अथ एकया** - இந்த நாடிகளுள் ஒன்றால், **ऊर्ध्व उदानः** மேல் நோக்கிப்போகும் உதாநம் என்னும் வாயுவானது, **पुण्येन** - புண்ய கர்மம் காரணமாக, **पुण्यं नयति** - [ஸ்வர்க்கம் முதலிய] புண்ய லோகத்திற்கு நயிப்பிக்கின்றது. **पापेन** - பாபம் காரணமாக, **पापम् नयति** - [நரகம் முதலிய] பாப லோகத்திற்கு நயிப்பிக்கின்றது. **उभाभ्याम्** - இரண்டும் காரணமாக [அதாவது: புண்யம் பாபம் இரண்டும் ஸமமாக இருந்தால்], **मनुष्यलोकम् नयति** - மநுஷ்ய லோகத்திற்கு நயிப்பிக்கின்றது.

இந்த நாடி முதலில் சொல்லப்பட்ட நூற்றொரு நாடிகளுள் ஒன்று. அது ஒன்றுதான் மேல்நோக்கிப் போகின்றது. அதற்கு 'ஸுஷும்நா' என்று பெயர். தேஹத்தை விட்டு ப்ராணன் வெளியில் போவதற்கு இது தான் ஸாதநம்.

'தன்னை ஐந்து விதமாகப் பிரித்துக்கொண்டு எப்படி ப்ராணன் ப்ரதிஷ்டை பெறுகின்றது?' என்று கேட்ட ப்ரஶ்நத்திற்கு "**यथा सम्राट्**" என்பது முதல் "**मनुष्यलोकम्**" என்னும் பர்யந்தம் ஸமாதாநம் சொல்லப்பட்டது. இதன் நடுவில், 'எப்படி வெளியில் புறப்பட்டுப் போகிறது?' என்னும் ப்ரஶ்நத்திற்கு இந்த 7-வது மந்த்ரம் ஸமாதாநம்.

---

8. 'பாஹ்ய ரூபமாக எப்படி ஸந்நிஹிதமாகின்றது?' என்னும் ப்ரஶ்நத்திற்கு இது ஸமாதாநம். இந்த ப்ராணன் ஶரீரத்துக்குள் இருப்பதுபோல ஶரீரத்திற்கு வெளியிலும் இருந்துகொண்டு, ஶரீரத்திலுள்ள இந்த்ரியங்களுக்கு உபகாரத்தைச் செய்துகொண்டிருக்கிறது என்பது இதனால் தெரிகின்றது. உயர ஸூர்யனாக இருந்துகொண்டு, கண்ணாகிற இந்த்ரியத்திற்கு வெளிச்சம் என்னும் ஸஹகாரியைக்கொடுத்து உபகரிக்கின்றது. கீழில் பூமியிலுள்ள ப்ராண கலையாக இருந்துகொண்டு பாயு உபஸ்தம் இந்த இந்த்ரியங்களுக்கு அபாந வ்ருத்தியாகிற அபகர்ஷணத்தைச் செய்து உபகரிக்கின்றது. நடு ப்ரதேஶத்தில் ஆகாஶமாக இருந்துகொண்டு ஸமாந வாயுவின் வ்ருத்தியாகிற அந்ந ஸமீகரணத்தைச் செய்விப்பதில் உபகரிக்கின்றது. இம்மாதிரி இந்த்ரியங்களுக்குச் செய்வதே இந்த ப்ராணனுடைய பாஹ்ய ஸந்நிதாநத்தின் ப்ரயோஜநம்.

[ப-ரை.] **आदित्यो ह वै** - ஸூர்யனன்றோ, **बाह्यः प्राणः** - வெளியிலிருக்கும் ப்ராணன்? **एषः** - இது, **एवं चाक्षुषं प्राणम्** - கண்ணில் இருக்கும்

http://acharya.org

तेजो ह वा उदानः ; तस्मादुपशान्ततेजाः पुनर्भवमिन्द्रियैर्मनसि संपद्य-
मानैः ॥ ९ ॥

यच्चित्तस्तेनैष प्राणमायाति प्राणस्तेजसा युक्तः । सहात्मना यथा सङ्कल्पितं
लोकं नयति ॥ १० ॥

இந்த ப்ராணனை, **अनुगृह्णानः**-அநுக்ரஹித்துக்கொண்டு, **उदयति हि** - உதயமாகின்றது. [ப்ரகாஶத்தைக் கொடுத்து அது வழியாக உபகாரம் செய்கின்றது.] **पृथिव्यां या देवता**-பூமியில் யாதொரு ப்ராண கலை உண்டோ, **सैषा**-அந்தக் கலையானது, **पुरुषस्य**-இந்தத் தேஹத்தினுடைய, **अपानमवष्टभ्य** அபாநவ்ருத்தியை வஶீகரணம் செய்துகொண்டு [உபகரிக்கின்றது]. **यदाकाशः** - [மத்ய ப்ரதேஶத்தில்] யாதொரு ஆகாஶமுண்டோ [அங்குள்ள ப்ராண கலையானது], **सः** - அது, **समानः** - ஸமாந வாயு ; [ஸமாந வாயு செய்யவேண்டிய வ்யாபாரத்தில் உபகரிக்கின்றது]. **वायुः** [வெளியிலுள்ள] வாயுவானது, **व्यानः** - வ்யாந வாயு; [வ்யாந வாயு செய்ய வேண்டிய வ்யாபார்ரமாகிற த்வக் [தோல்] வ்ருத்தியில் உபகரிக்கின்றது.

---

9 - 10 இந்த மந்த்ரங்களில் சொல்லப்படும் விஷயமாவது:— இவ்விடத்தில் பாஹ்யஸ்திதிதேஜோரூபமென்று சொல்லப்படுகிறது. அந்தத் தேஜஸ் உதாந வாயுவின் வ்யாபாரத்திற்கு உபகாரத்தைச் செய்கிறது. ப்ராணனைத் தேஹத்திலிருந்து வெளிப்படுத்துவது உதாந வாயுவின் வ்ருத்தி. மேல் நோக்கிப் போகும் நாடி வழியாகப் புண்யலோகத்திற்கும் பாப லோகத்திற்கும் அது ப்ராணனை நயிப்பிக்கிறதென்று கீழே சொல்லியிருக்கிறதன்றோ ? தேஹத்திலிருந்து, தேஜஸ் [அதாவது: உஷ்ணம்] வெளிப்பட்டால், அப்பொழுது புருஷன் முமூர்ஷுவாகிறான். அப்படி முமூர்ஷுவாக இருக்கும்பொழுது வாக் முதலிய இந்த்ரியங்கள் தம்தம் வ்யாபாரங்களிலிருந்து ஒழிவடைந்து மநஸ்ஸில் ஸம்பத்தி அடைகின்றன. அவ்விதம் மநஸ்ஸில் ஸம்பத்தியை அடைந்த இந்த்ரியங்களுடன் நிற்கும் ப்ராணனை, ஜீவன், தன்னால் அப்பொழுது இச்சிக்கப்படும் ஜந்மத்தை அடையப் போகிறவனாய் அடைகின்றான். அந்த ப்ராணன் அந்த ஜீவனை எந்த லோகத்திற்கு அவனைக் கொண்டுபோய் விட வேண்டுமோ அந்த லோகத்திற்கு நயிப்பிக்கின்றது.

இதில் ஒரு விஷயம் கவனிக்கவேண்டியது உண்டு. மரணம் நேருங் காலத்தில் வாக் முதலிய இந்த்ரியங்கள் மநஸ்ஸில் ஸம்பத்தியை அடைகின்றன வென்பது வேறு இடங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், ஓரிடத்திலும் ஜீவன் ப்ராணனை அடைவதாகச் சொல்லப்படவில்லை ; ப்ராணன் ஜீவனை அடைவதாகவே சொல்லப்பட்டிருக்கின்றது. "**सोध्यक्षे**" [**सः** - அந்த ப்ராணன், **अध्यक्षे** இந்த்ரியங்களுக்கு அதிபனாயிருக்கிற ஜீவனிடத்தில், **संपद्यते** - ஸம்பத்தியை அடைகின்றான்] என்பது

http://acharya.org

य एवं विद्वान् प्राणं वेद। न हाऽस्य प्रजा हीयतेऽमृतो भवति तदेष श्लोकः ॥ ११ ॥

उत्पत्तिमायतिं स्थानं विभुत्वञ्चैव पञ्चधा।

ஸ்ரீ வ்யாஸ ஸூத்ரம். அப்படியிருக்கையில், இவ்விடத்தில் 'ஜீவன் ப்ராணனை அடைகிறான் என்று சொல்லப்பட்டிருப்பது எப்படி?' என்று ஒரு ஶங்கை உதிக்கலாம். அதற்கு ஸமாதாநம் ஒன்றே. அதாவது: இந்த ப்ரகரணம் ப்ராணனை ப்ரஶம்ஸிக்கிற ப்ரகரணமாகையால், அப்படிப் பேசப்பட்டிருக்கிறது. என்றே உபபத்தி சொல்லவேண்டும்.

[ப - ரை.] **तेजो ह वै** [வெளியில் இருக்கும்] தேஜஸ்ஸே, **उदानः**- உதாந வாயு, [உதாந வாயுவுக்குத் தேஜஸ் அநுக்ராஹகமாக இருக்கிறபடியால், அதுவே உதாநவாயுவென்று உபசாரமாகப் பேசப்படுகிறது.] **तस्मात्** - ஆகையால் [அந்தத் தேஜஸ்ஸானது தேஹத்திலிருக்கும் உதாந வாயுவை அநுக்ரஹியாமல் நின்றுவிட்டால், அப்பொழுது தேஹத்திலுள்ள ஔஷ்ண்யம் குறைந்துவிடுகிற தானதால்], **उपशान्ततेजाः** - உஷ்ணம் ஶாந்தமாகி முமூர்ஷுவாக இருக்கும் ஜீவன், **यच्चित्तः** - எதை விரும்பிக்கொண்டு [எந்த ஜந்மத்தை அடையவேண்டுமென்று விரும்புகிறானோ], **तेन** - அந்த விருப்பத்தின் வஶத்தால், **पुनर्भवम्** - மறுபடியும் உத்பத்தியை அடைவதற்கு, **मनसि संपद्यमानैः इन्द्रियैः सहितम्** - மநஸ்ஸில் ஸம்பத்தியை அடைந்திருக்கும் இந்த்ரியங்களுடன் கூடியிருக்கும், **प्राणम्** ப்ராணனை, **आयाति** - அடைகிறான். **प्राणः** - அந்த ப்ராணன், **तेजसा युक्तः** - பரமாத்மாவுடன் ஸம்யுக்தனைக் கொண்டு, **आत्मना यथासङ्कल्पितम्** - அந்த ஜீவாத்மாவால் இச்சிக்கப்பட்ட, **लोकम्** - லோகத்திற்கு, **नयति** நயிப்பிக்கின்றது.

இந்த மந்த்ரங்களில், ப்ராணனுடைய பாஹ்ய ஸந்நிதாநம் சொல்லப்படுவதுடன், 'அத்யாத்ம ஸ்திதி எப்படி?' என்னும் கடைசி ப்ரஶ்நத்திற்கும் ஸமாதாநமும் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைக் கவனிக்கவேண்டும்.

---

11. [ப - ரை] **यः** - எவன், **एवम्** - இவ்வாறு, **विद्वान्** - அறிந்தவனாய், **प्राणम्** - ப்ராணனை, **वेद** - உபாஸிக்கிறானோ, **अस्य** - அவனுக்கு, **प्रजाः** - புத்ர பௌத்ராதிகளான ஸந்ததி, **न हीयते** - ஹாநியை அடைகிறதில்லை. **अमृतो भवति** - மோக்ஷத்தைப் பெற்றவனும் ஆகிறான். [பரிசுத்த ஜீவாத்ம ஸ்வரூப ப்ரதிபத்தி வழியாக ப்ரஹ்மோபாஸந ப்ரீதியை அடைகிறபடியால், இந்த ப்ராணோபாஸ்தி மோக்ஷஹேதுவாகக் கூடுமன்றோ?], **तत्** - அந்த ப்ராணோபாஸ்தியைக் குறித்து, **एष श्लोकः** இந்த ஶ்லோகம் பேசுகின்றது.

---

12. [ப - ரை.]. **प्राणस्य** - ப்ராணனுடைய, **उत्पत्ति** - உத்பத்தி

http://acharya.org

**अध्यात्मञ्चैव प्राणस्य विज्ञायामृतमश्नुते ।
विज्ञायामृतमश्नुत इति ॥ १२ ॥**

इति तृतीयः प्रश्नः ॥

யையும் [பரமாத்மாவிடமிருந்து உத்பத்தியை அடைகின்றது என்பதையும்], **आयतिम्** - [மநஸ்ஸுடன் கூடச்] சேர்வதையும், **स्थानम्** [ஶரீரத்தில் பாயு உபஸ்தம் முதலான இடங்களில்] இருப்பதையும், **विभुत्वम्** - [சக்ரவர்த்தி மாதிரியாக இருந்துகொண்டு ஐந்துவித ப்ராணாபாநம் முதலியவைகளை நியமிக்கும்] ஸ்வாம்யத்தையும், **अध्यात्मम्** - தேஹத்தில் [ஐந்து விதமாகப் பிரிந்து] நிற்பதையும், **च** - [இது மற்றொன்றையும் ஸமுச்சயிக்கின்றது. அதாவது: ஆதித்யன் முதலான ரூபத்துடன் வெளியில் நிற்பதையும்], **विज्ञाय** - அறிந்து [அறிந்தும் உபாஸித்தும்], **अमृतम् अश्नुते** - மோக்ஷத்தை அடைகிறான். இரண்டு ஆவ்ருத்தி சொல்வது ப்ரஶ்நத்தின் முடிவைக் காண்பிக்கின்றது.

மூன்றாவது ப்ரஶ்நம் முற்றிற்று.

---

http://acharya.org

॥ श्रीः ॥

॥ प्रश्नोपनिषत् ॥

॥ चतुर्थः प्रश्नः ॥

हरिः ओम् । अथ हैनं सौर्यायणी गार्ग्यः पप्रछ । “भगवन्नेतस्मिन् पुरुषे कानि स्वपन्ति ? कान्यस्मिन् जाग्रति ? कतर एष देवः स्वप्नान् पश्यति ? कस्यैतत्सुखं भवति ? कस्मिन्नु सर्वे संप्रतिष्ठिता भवन्ति ? ” इति ॥ १ ॥

ஸ்ரீ:

நான்காவது ப்ரஶ்நம்

கீழ் ப்ரஶ்நத்தில், ஜீவாத்மாவானது ப்ராணனைக் காட்டிலும் வேறுபட்டது என்பது விளக்கப்பட்டது. இந்த ப்ரஶ்நத்தில் ஸ்வப்ந ஸுஷுப்தி தசைகளை வர்ணிப்பதன் த்வாரா, இந்த்ரியங்களெல்லாம் ஸ்வப்ந தசையில் உபஶாந்தியை அடைகின்றனவென்றும், ப்ராணன் மாத்ரம் அப்பொழுது ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறதென்றும், ஸுஷுப்தி காலத்தில் ஜீவாத்மாவானது பரமாத்மாவுடன் ஸம்பத்தியை அடைகிறானென்றும் இத்யாதியான விஷயங்களை விளக்குகிறார். இதிலிருந்தும் ஜீவாத்ம பரமாத்மாக்களின் வைலக்ஷண்யம் வெளிப்படுகின்றது. அதுதான் உத்தேஶ்யம்.

[ப-ரை.] **अथ** - பிறகு, **एनम्** - இவரை [பிப்பலாதரை], **गार्ग्यः** **सौर्यायणी** - கார்க்க கோத்ரோத்பவரான ஸௌர்யாயணீ என்பவர், **पप्रच्छ** கேட்டார். “**भगवन्** - ஹே, ஸ்வாமியே! **एतस्मिन् पुरुषे** - இந்த ஜீவாத்மா வானது, [**सुप्ते सति** - தூங்கும்பொழுது], **कानि स्वपन्ति** - எவை தூங்கு கின்றன? **अस्मिन्** [**सुप्ते सति**] - இவன் தூங்கும்பொழுது, **कानि जाग्रति** எவை விழித்துக்கொண்டிருக்கின்றன? **एष देवः** - இந்த ஜீவன் [ப்ரகா ஶம் முதலிய குணங்களுடன் கூடியிருப்பதால் ஜீவாத்மா தேவனென்று பேசப்படுகின்றது], **कतरः** - எப்படி இருந்துகொண்டு, **स्वप्नान्** - ஸ்வப் நத்தில் காணப்படும் ரதம் முதலிய பொருள்களை, **पश्यति** - பார்க்கிறான்? **एतत्सुखम्** - இந்த ஸுகமெல்லாம் [விஷயாநுபவத்தால் உண்டாகும் ஸுகம்], **कस्य** - எதற்காக, **भवति** - உண்டாகின்றது? **सर्वे** - இவை யெல் லாம், **कस्मिन्** - எதில், **संप्रतिष्ठिता भवन्ति** - நிலைபெற்று நிற்கின்றன?” **इति** - என்று [கேட்டான்].

http://acharya.org

तस्मै स होवाच । " यथा गार्ग्य मरीचयोऽर्कस्यास्तं गच्छतः सर्वा एतस्मिंस्तेजोमण्डल एकीभवन्ति, ताः पुनःपुनरुदयतः प्रचरन्ति, एवं ह वै तत्सर्वं परे देवे मनस्येकीभवति । तेन तर्ह्येष पुरुषो न शृणोति, न पश्यति, न जिघ्रति, न रसयते, न स्पृशते, नाभिवदते, नादत्ते, नानन्दयते, न विसृजते, नेयायते ; स्वपितीत्याचक्षते ॥ २ ॥

प्राणाग्नय एवैतस्मिन् पुरे जाग्रति । गार्हपत्यो ह वा एषोऽपानः, व्यानो-

---

2, [ப - ரை] **सः** - அவர் [பிப்பலாதர்], **तस्मै**-அந்த ஸௌர்யாயணிக்கு, **उवाच** - [ஸமாதாநம்] சொன்னார். "**गार्ग्य** - ஹே கார்க்யரே! **अस्तं गच्छतः अर्कस्य** - அஸ்தமநம் அடையும் ஸூர்யனுடைய, **सर्वाः मरीचयः** - கிரணங்களெல்லாம், **यथा** - எப்படி, **एतस्मिन् तेजोमण्डले** - இந்த ஸூர்ய மண்டலத்தில், **एकीभवन्ति** - ஒன்றாகி விடுகின்றனவோ [மண்டலத்தினுள் அடங்கிவிடுகின்றனவோ], **ताः पुनः पुनः उदयतः** - அந்தக் கிரணங்களே மறுபடியும் உதயமாகும் [அந்த ஸூர்யனிடமிருந்தே], **प्रचरन्ति** - வெளிவந்து [நாலு பக்கங்களிலும்] ப்ரஸரிக்கின்றனவோ, **एवं ह वै** - அம்மாதிரியே, **तत्सर्वं** - அதெல்லாம் [அந்த இந்த்ரியக் கூட்டம் முழுவதும்], **परे देवे** - [இந்த்ரியங்களைக் காட்டிலும்] உத்க்ருஷ்டமானதாகவும் ப்ரகாசத்துடனும் கூடியிருப்பதால் 'தேவன்' என்று சொல்லக் கூடிய [மநஸ்ஸில்], **एकीभवति** - ஒன்றாகிவிடுகின்றது. [தங்கள் தங்கள் வ்யாபாரங்களைச் செய்ய ஶக்தியற்றவையாகப் பண்ணும் ஒருவிதமான சேர்க்கையை அடைகின்றது]. **तेन तर्हि** அந்தக் காரணத்தாலன்றோ, **एष पुरुषः**-இந்த ஜீவன் [தூங்கும் தசையில்], **न शृणोति** - கேட்கிறானில்லை; **न पश्यति** - பார்க்கிறானில்லை ; **न जिघ्रति** - முகருகிறானில்லை ; **न रसयते**-ருசி அறிகிறானில்லை ; **न स्पृशते**-தொடுகிறானில்லை ; **न अभिवदति**-பேசுகிறானில்லை; **न आदत्ते** [கைநீட்டி] வாங்குகிறானில்லை ; **न आनन्दयते**-வேறு [வைஷயிக] ஸுகம் ஒன்றையும் அநுபவிக்கிறானில்லை; **न विसृजते** - விஸர்க்கம் முதலியவைகளைச் செய்கிறானில்லை ; **न ईयायते** - நடக்கிறானில்லை, **स्वपितीति आचक्षते** - [அவன்] தூங்குகிறான் என்று மாத்ரம் சொல்லுகிறார்கள். [இவ்விடத்தில் த்ருஷ்டாந்தத்தில் ஸூர்யகிரணங்கள் அடங்குவதையும் பிறகு வெளிப்படுவதையும் பற்றி ப்ரஸ்தாவித்திருந்தாலும், தார்ஷ்டாந்திகத்தில் இந்த்ரியங்கள் அடங்குவது மாத்ரமே பேசப்படுகின்றது ; மறுபடியும் தூங்கி எழுந்தவுடன் இந்த்ரியங்களெல்லாம், ஸூர்யன் உதயமாகும்பொழுது கிரணங்கள் வெளிப்படுவனபோல் வெளிவந்து தங்கள் தங்கள் வ்யாபாரங்களில் ப்ரவர்த்திக்கின்றன என்பதும் விவக்ஷிதம்].

---

3 - 4. நாம் தூங்கும் காலத்தில் எவை விழித்துக்கொண்டிருக்கின்றனவென்னும் ப்ரஶ்நத்திற்கு ஸமாதாநம் சொல்லுகிறார்.

http://acharya.org

ऽन्वाहार्यपचनो यद्गार्हपत्यात् प्रणीयते प्रणयनादाहवनीयः प्राणः ॥ ३ ॥

यदुच्छ्वासनिश्श्वासावेतावाहुती । समं नयतीति स समानः । मनो ह वाव यजमानः । इष्टफलमेवोदानः ; स एनं यजमानमहरहर्ब्रह्म गमयति ॥ ४ ॥

[ப - ரை] **प्राणाग्नय एव** - ப்ராணன் முதலிய அக்நிகள் மாத்ரம் [இவ்விடத்தில் ப்ராணாபாநம் முதலியவைகளின் அநுஸந்தாநத்தை ஒரு அக்நிஹோத்ரத்திற்கு ஸமாநமாகப் பேசுகிறபடியால், ப்ராணாக்நி என்னும் வ்யவஹாரம் உபபந்நம்]. **एतस्मिन् पुरे** - இந்த [ஶரீரமாகிற] பட்டணத்தில், **जाग्रति** - விழித்துக்கொண்டிருக்கின்றன. **एष अपानः** அபாந மென்னும் இந்த வாயு, **गार्हपत्यः** - கார்ஹபத்யாக்நி ; **व्यानः** - வ்யாந என்னும் வாயு, **अन्वाहार्यपचनः** - அந்வாஹார்ய பசந மென்று சொல்லப்படும் தக்ஷிணாக்நி ; **प्राणः** - ப்ராணன் என்னும் வாயு, **यद्गार्हपत्यात्** **प्रणीयते** - கார்ஹபத்யாக்நியிலிருந்து ப்ரணயநம் செய்யப்படுகின்றது என்னும், **प्रणयनात्** - ப்ரணயந காரணத்தால், **आहवनीयः** - ஆஹவநீயாக்நி ஆகின்றது ; **यत् एतौ उच्छ्वासनिश्श्वासौ** - உச்வாஸம் நிஶ்வாஸம் என்று சொல்லப்படும் இரண்டு மூச்சுக்களும், **आहुती** - இரண்டு ஆஹுதி கள் ; **समानः** - ஸமாநம் என்னும் வாயு, **समं नयति इति** - [அந்த ஆஹுதிகளாகிற உச்வாஸ நிஶ்வாஸங்களைப் பிரித்து] ஸமமாகச் செய்கிற படியால், **सः**-அவன் [அக்நிஹோத்ரத்தின் ஒரு அவயவமாகிற அத்வர்யு]; **मनः** - மநஸ்ஸானது, **यजमानः** - [அக்நிஹோத்ரம் செய்யும்] யஜமாநன்; **उदानः** - உதாநமானது, **इष्टफलम्** - [செய்யப்படும் அக்நிஹோத்ரமாகிற] கர்மத்தின் பலம். **सः** - அது [அந்த உதாநம் என்னும் வாயு], **एनम्** - இவனை [மநஸ்ஸாகிற இந்த யஜமாநனை], **अहरहः** - ஒவ்வொரு திநத்தி லும் [தூங்கும் காலத்தில்], **ब्रह्म** - பரமாத்மாவிடம், **गमयति** - கொண்டு போய் விடுகிறது.

அக்நிஹோத்ரத்திற்கு எட்டு அவயவங்கள் உண்டு: அவையாவன :- கார்ஹபத்ய ஆஹவநீய தக்ஷிண என்னும் மூன்று அக்நிகள், இரண்டு ஆஹுதிகள், அத்வர்யு, யஜமாநன், கர்மபலம் ஆக எட்டு. இந்த ப்ராணாக்நி ஹோத்ரத்தில், அபாநம் கார்ஹபத்யாக்நி; ப்ராணன் ஆஹ வநீயாக்நி; வ்யாநம் தக்ஷிணாக்நி; உச்வாஸ நிஶ்வாஸங்கள் இரண்டும் இரண்டு ஆஹுதிகள்; ஸமாநம் அத்வர்யு; மநஸ் யஜமாநன்; உதாநம் கர்மபலம்.

மற்றும் ஒரு விஷயம் இவ்விடத்தில் கவனிக்கவேண்டியது உண்டு. அதாவது: இவ்விடத்தில் **'एनं ब्रह्म गमयति'** [மநஸ் ப்ரஹ்மத்தி னிடத்தில் கொண்டுபோய் விடப்படுகின்றது] என்று மநஸ்ஸுக்கு ப்ரஹ்ம கமநம் சொல்லப்படுகின்றது. வேறு உபநிஷத்துக்களில் 'ப்ரஹ் மத்தினிடம் நயிப்பிக்கப்படுகிறவன் ஜீவனே' என்று சொல்லியிருப்ப தைப் பார்க்கிறோம். ஜீவனுக்கு ப்ரஹ்ம கமநம் சொல்வதே உபபந்ந

http://acharya.org

अत्रैष देवः स्वप्ने महिमानमनुभवति । यद्दृष्टं दृष्टमनुपश्यति, श्रुतं श्रुतमेवार्थमनुशृणोति, देशदिगन्तरैश्च प्रत्यनुभूतं पुनः पुनः प्रत्यनुभवति । दृष्टञ्चादृष्टञ्च श्रुतञ्चाश्रुतञ्चानुभूतञ्चाननुभूतञ्च सर्वं पश्यति सर्वः पश्यति ॥ ५ ॥

மாதலால், இவ்விடத்தில் மநஸ்ஸுக்குச் சொல்லப்பட்டிருக்கும் ப்ரஹ்ம கமநத்தை வேறுவிதமாக நயிப்பிப்பது உசிதமாகுமென்று எண்ணிப் பாஷ்யகாரர்கள், மநஸ்ஸுக்குப் புரீதத் என்னும் நாடீ பர்யந்தம் கமநத்தை எல்லா உபநிஷத்துக்களும் சொல்லுகிறபடியால், அதை ப்ரஹ்ம கமநத்திற்கு ஸமாநமாகப் பேசுவது உபபந்நமென்று நிர்வஹித்திருக்கிறார்கள்.

—

5. 'இந்த ஜீவன் எப்படி இருந்துகொண்டு ஸ்வாப்ந வஸ்துக்களைப் பார்க்கிறன்?' என்னும் ப்ரஶ்நத்திற்கு ஸமாதாநம் சொல்லப்படுகிறது.

[ப - ரை] **अत्र** - இந்த ஸமயத்தில், **एष देवः** - இந்த ஜீவன், **स्वप्ने** - ஸ்வப்நத்தில், **महिमानम्** - பெருமையை [யானை குதிரை முதலியவைகளைப் பார்க்கும் பெருமையை], **अनुभवति** - பார்க்கிறன் [பார்த்து அநுபவிக்கிறன்]. **यत् दृष्टं** - எது [ஜாக்ரத்தசையில்] திரும்பித்திரும்பிப் பார்க்கப்பட்டதோ, [**तदेव**] **अनुपश्यति** - அதையே மறுபடியும் பார்க்கிறன். **श्रुतं श्रुतमेव अर्थं अनुशृणोति** - எது கேட்கப்பட்டதோ அதையே கேட்கிறன். **देशदिगन्तरैश्च** - வேறு ஸ்தலங்களிலும் வேறு திக்குக்களிலும், **पुनः पुनः प्रत्यनुभूतम्** - திரும்பத் திரும்ப எது அநுபவிக்கப்பட்டதோ, [**तदेव** - அதையே], **प्रत्यनुभवति**- மறுபடியும் அநுபவிக்கிறன். [இதுமாத்ர மில்லை], **दृष्टं च अदृष्टंच** - [ஏற்கெனவே] பார்க்கப்பட்டதும் [இதுபர்யந்தம்] பார்க்கப்படாததும், **श्रुतंचाश्रुतंच** - கேட்கப்பட்டதும் கேட்கப்படாததும், **अनुभूतंचाननुभूतं च**-அநுபவிக்கப்பட்டதும் அநுபவிக்கப்படாததும், **सर्वम्**-எல்லாவற்றையும், **पश्यति** - பார்க்கிறன்; **सर्वः**[**सन्**] எல்லாமாக இருந்துகொண்டு [த்ரஷ்டாவாகவும் ஶ்ரோதாவாகவும் கந்தாவாகவும் இப்படியெல்லாம் இருந்துகொண்டு], **पश्यति**-பார்க்கிறன். [அதாவது: பார்க்கிறவனாகவும் கேட்கிறவனாகவும் அநுபவிக்கிறவனாகவும், இப்படி வெவ்வேறு அவஸ்தையை அடைந்தவனாய் இருந்துகொண்டு அநுபவிக்கிறன்.] நித்ரையில் இந்தத் தேஹத்தை ஆஶ்ரயித்திருக்கும் இந்த்ரியம் முதலியவையெல்லாம் உபரதங்களாக இருந்தும், ஸ்வப்ந காலத்தில் பகவானல் இவனுடைய அநுபவத்திற்காகத் தாத்காலிகமாக ஸ்ருஷ்டிக்கப்பட்டுள்ள இந்த்ரியம் முதலியவைகளைக் கொண்டு இவன் இம்மாதிரி அநுபவங்களை அநுபவிக்கிறன். இதுதான் இம்மந்த்ரத்தின் கருத்து.

—

http://acharya.org

स यदा तेजसाऽभिभूतो भवति, अत्रैष देवस्स्वप्नान्न पश्यति । अथ तदेतस्मिन् शरीरे एतत्सुखं भवति ॥ ६ ॥

स यथा सोम्य वयांसि वासोवृक्षं संप्रतिष्ठन्ते, एवं ह वै तत्सर्वं पर आत्मनि संप्रतिष्ठते ॥ ७ ॥

---

6. ஸ்வப்நாவஸ்தை வர்ணிக்கப்பட்டது. இனி ஸுஷுப்தி அவஸ்தை எப்படிப்பட்டதென்று விவரிக்கப்படுகின்றது. ஸுஷுப்தியில் இந்த்ரியங்கள் மாத்ரமின்றிக்கே மநஸ்ஸும் உபரதியை அடைகின்றது. ஸ்வப்நாவஸ்தையில் அநுபவிக்கப்பட்டவை ஒன்றும் ஸுஷுப்தியில் அநுபவிக்கப்படுகிறதில்லை; இப்பொழுது ஜீவன் பரமாத்மாவுடன் ஸம்பத்தியை அதாவது: ஒருவித ஸம்ஶ்லேஷத்தைப் பெறுகிறான். அவனுக்கு ஜ்ஞாநம் அதிமாத்ரம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால்அந்த ஸம்ஶ்லேஷத்தை அவன் உணர்கிறானில்லை.

[ப - ரை.] **सः** - அவன் [அந்த ஜீவன்], **यदा** - எப்பொழுது, **तेजसा** - தேஜஸ் என்னும் ஶப்தத்தால் சொல்லப்படும் பரமாத்மாவுடன், **अभिभूतो भवति** - ஸம்பந்நனாக ஆகிறானோ, **अत्र** - அவ்விடத்தில் [அதாவது: அந்த ஸுஷுப்தி அவஸ்தையில்], **एष देवः** - இந்த ஜீவன், **स्वप्नान्** - ஸ்வாப்ந பதார்த்தங்களை, **न पश्यति** - பார்க்கிறானில்லை. [இதனால், 'எவன் ஸ்வப்ந பதார்த்தங்களைப் பார்க்கிறான்' என்னும் ப்ரஶ்நத்திற்கு ஸமாதாநம் சொல்லப்பட்டதாகின்றது. 'இந்த ஜீவனே அவைகளைப் பார்க்கிறான்; ஆனால், அது ஸ்வப்நாவஸ்தையில் மாத்ரம் உண்டு என்று விளக்கப்பட்டதாயிற்று. இனி 'யாருக்கு இந்த ஸுகம்?' என்பதற்கு ஸமாதாநம் சொல்லப்படுகின்றது.] **यदेतत्सुखं भवति** - ஸுகமென்று யாதொன்று ஸம்பவிக்கின்றதோ, **तदेतस्मिन् शरीरे** - அந்த ஸுகம் இந்த ஶரீரம் இருக்கும்போதுதான். [அதாவது: ஶரீரமே விஷய ஸம்பந்தத்தால் ஏற்படும் ஸுகங்களுக்கு ஹேதுவென்று சொல்லப்பட்டதாகிறது.]

---

7. 'இவையெல்லாம் எதில் ப்ரதிஷ்டிதமாக இருக்கின்றன?' என்னும் ப்ரஶ்நத்திற்கு ஸமாதாநம் சொல்லப்படுகின்றது.

[ப - ரை.] **सोम्य** - ஹே ஸௌம்ய! **यथा** - எப்படி, **वयांसि** - பக்ஷிகள், **वासोवृक्षम्** - தாங்கள் வஸிக்கும் வ்ருக்ஷத்தைக் குறித்து, **संप्रतिष्ठन्ते** - ப்ரதிஷ்டை பெறுவதற்குப் போகின்றனவோ, **सः** - இது தான் த்ருஷ்டாந்தம்; **एवम्** - அப்படியே, **तत्सर्वम्** - இவையெல்லாம், **परे आत्मनि** - பரமாத்மாவினிடத்தில், **संप्रतिष्ठते** - ப்ரதிஷ்டை பெற்று நிற்கின்றது.

---

http://acharya.org

पृथिवी च पृथिवीमात्रा च, आपश्चापोमात्रा च, तेजश्च तेजोमात्रा च, वायुश्च वायुमात्रा च, आकाशश्चाकाशमात्रा च, चक्षुश्च द्रष्टव्यञ्च, श्रोत्रञ्च श्रोतव्यञ्च, घ्राणञ्च घ्रातव्यञ्च, रसश्च रसयितव्यञ्च, त्वक्च स्पर्शयितव्यञ्च, वाक्च वक्तव्यञ्च, हस्तौ चादातव्यञ्च, उपस्थश्चानन्दयितव्यञ्च, पायुश्च विसर्जयितव्यञ्च, पादौ च गन्तव्यञ्च, मनश्च मन्तव्यञ्च, बुद्धिश्च बोद्धव्यञ्च, अहङ्कारश्चाहङ्कर्तव्यञ्च, चित्तञ्च चेतयितव्यञ्च, तेजश्च विद्योतयितव्यञ्च, प्राणश्च विधारयितव्यञ्च ॥ ८॥

एष हि द्रष्टा स्प्रष्टा श्रोता घ्राता रसयिता मन्ता बोद्धा कर्ता विज्ञानात्मा पुरुषः। स परेऽक्षरे आत्मनि संप्रतिष्ठते ॥ ९ ॥

---

8. 'இவையெல்லாம்' என்பதால் குறிக்கப்படுபவைகள் இவ்விடத்தில் விவரிக்கப்படுகின்றன.

[ப - ரை.] **पृथिवी च** - பூமியும், **पृथिवीमात्रा च** - பூமியாக மாறுவதற்கு முன்னதாக அதற்கு இருந்த அவஸ்தையும், [புராணங்களில், ப்ருதிவீ தந்மாத்ரை, தேஜஸ் தந்மாத்ரை, இவ்வாறு 'தந்மாத்ரை'களென்று வ்யவஹரிக்கப்படுமவையெல்லாம், அவையவைகளின் பூர்வாவஸ்தையையே குறிக்கின்றன.] **आपश्च** - ஜலமும், **आपोमात्रा च** - அதன் பூர்வாவஸ்தையும், **तेजश्च तेजोमात्रा च** - தேஜஸ்ஸும் அதன் பூர்வாவஸ்தையும், **वायुश्च वायुमात्रा च** - வாயுவும் அதன் பூர்வாவஸ்தையும், **आकाशश्च आकाशमात्रा च** - ஆகாஶமும் அதன் பூர்வாவஸ்தையும், **चक्षुश्च द्रष्टव्यञ्च** - கண்ணும் அதனால் பார்க்கப்படத் தகுந்தவைகளும், **श्रोत्रञ्च श्रोतव्यञ्च** - காதும் அதனால் கேட்கப்படத் தகுந்தவைகளும், **घ्राणञ्च घ्रातव्यञ्च** - மூக்கும் அதனால் முகரப்படத் தகுந்தவைகளும், **रसश्च रसयितव्यञ्च** - நாக்கும் அதனால் ருசிக்கப்படத் தகுந்தவைகளும், **त्वक्च स्पर्शयितव्यञ्च** - தோலும் அதனால் ஸ்பர்ஶிக்கத் தகுந்தவைகளும், **वाक्च वक्तव्यञ्च** - வாக்கும் அதனால் வ்யவஹரிக்கத் தகுந்தவைகளும், **हस्तौ च आदातव्यञ्च** - கைகளும் அவைகளால் வாங்கத் தகுந்தவைகளும், **उपस्थश्च आनन्दयितव्यञ्च** - உபஸ்தமென்னும் அவயவமும் அதனால் ஆநந்திக்கத் தகுந்தவைகளும், **पायुश्च विसर्जयितव्यञ्च** - பாயு என்னும் அவயவமும் அதன் வழியாக வெளிப்படுத்தத் தகுந்தவைகளும், **पादौ च गन्तव्यञ्च** - கால்களும் அவற்றால் நடக்கத் தகுந்தவைகளும், **मनश्च मन्तव्यञ्च** - மநஸ்ஸும் அதனால் நினைக்கத்தகுந்தவைகளும், **बुद्धिश्च बोद्धव्यञ्च** - புத்தியும் அதனால் அறியப்படத் தகுந்தவைகளும், **अहङ्कारश्च अहङ्कर्तव्यञ्च** - அஹங்காரமும் அதற்கு லக்ஷ்யமாக இருக்குமவைகளும், **चित्तञ्च चेतयितव्यञ्च** - சித்தமும் அதனால் உணரத் தகுந்தவைகளும், **तेजश्च विद्योतयितव्यञ्च** - தேஜஸ்ஸும் அதனால் ப்ரகாசிக்கப்படத் தகுந்தவைகளும், **प्राणश्च विधारयितव्यञ्च** - ப்ராணனும் அதனால் தரிக்கப்படத் தகுந்தவைகளும் [இவையெல்லாம் பரமாத்மாவினிடத்திலேயே ப்ரதிஷ்டிதங்களாக இருக்கின்றன.]

---

9. ஜகத்தில் சேதந வஸ்துக்களென்றும் அசேதநங்களென்றும், கர்த்தாவென்றும் கரணமென்றும் கர்மாவென்றும் வ்யவஹரிக்கப்படுமவையெல்லாம், [அதாவது ப்ரபஞ்சம் முழுவதும்] பரமாத்மாவை ஆஶ்ரயித்தே நிற்கின்றது என்று வ்யவஹரிக்கப்படுகின்றது.

http://acharya.org

स यो ह वै तदच्छायमशरीरमलोहितं शुभ्रमक्षरं वेदयते यस्तु सोम्य । स सर्वज्ञस्सर्वो भवति । तदेष श्लोकः ॥ १० ॥

विज्ञानात्मा सह देवैश्च सर्वैः प्राणा भूतानि संप्रतिष्ठन्ति यत्र ।
तदक्षरं वेदयते यस्तु सोम्य स सर्वज्ञस्सर्वमेवाविवेश ॥ इति ॥

॥ चतुर्थः प्रश्नः ॥

[ப - ரை] **एष हि** - இந்த ஜீவனே, **द्रष्टा** - பார்க்கிறவன், **स्प्रष्टा** - ஸ்பர்ஶிக்கிறவன், **श्रोता** - கேட்கிறவன், **घ्राता** - முகருகிறவன், **रसयिता** - ருசி அறிகிறவன், **मन्ता** - எண்ணுகிறவன், **बोद्धा** - அறிகிறவன், **कर्ता** - செய்கிறவன், **विज्ञानात्मा पुरुषः** - ஜ்ஞாநத்தை ஸ்வரூபமாக உடைய புருஷன், **सः** - அவன், **परे अक्षरे आत्मनि** - ஸர்வோத்க்ருஷ்டனும் விகாரமற்றவனுயும் இருக்கும் பரமாத்மாவினிடத்தில், **संप्रतिष्ठते** - ப்ரதிஷ்டை பெற்று இருக்கிறான். [தார்க்கிகர்கள் ஆத்ம வஸ்துவானது அறியும் தர்மத்தை உடையதே யன்றி, அதன் ஸ்வரூபம் ஜ்ஞாநமன்று என்று சொல்லுகிறார்கள்; ஶாங்கரர்கள், அது ஜ்ஞாநத்தை ஸ்வரூபமாக உடையதே யன்றி, அது அறியும் தர்மத்தை உடையதன்று என்று சொல்லுகிறார்கள். இவர்கள் இருவருக்கும் இந்த ஶ்ருதி வாக்யம் விரோதிக்கின்றது. ஏனென்றால்: இதில், ஜீவன் ஜ்ஞாதா (அறிகிறவன்) என்றும் 'விஜ்ஞாநாத்மா' (ஜ்ஞாநத்தை ஸ்வரூபமாக உடையவன்) என்றும் இரண்டு ஆதாரங்களும் வ்யக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றனவன்றோ?

---

10. கீழ்ச் சொல்லப்பட்ட விஷயமே இன்னும் விளக்கப்படுகின்றது.

[ப - ரை.] **स यो ह वै** - எவன் ஒருவன், **तत्** - அந்தப் பரமாத்மவஸ்துவை, **अच्छायम्** - நிழலற்றவனென்றும் [அதாவது : ஜ்ஞாநத்திற்குக் குறைவைச்செய்யக்கூடிய கர்மமற்றவனென்றும்], **अशरीरम्** - [கர்மத்தால் ஏற்படும்] ஶரீரமற்றவனென்றும், **अलोहितम्** - [கர்ம க்ருத] ரூபமுதலியவை யற்றவனென்றும், **शुभ्रम्** ஸ்வயம் ப்ரகாஶனென்றும், **अक्षरम्** - மாறுதல்மற்றவனென்றும், **वेदयते** - அறிகிறானே, **सः** - அவன், **सर्वज्ञः** - எல்லாமறிந்தவன், **सर्वो भवति** - ஸர்வ காமங்களையும் அநுபவிக்கிறவனாகிறான். **तदेष श्लोकः** - அப்படிப்பட்ட பரமாத்மாவைக் குறித்து ஒரு ஶ்லோகமும் உண்டு.

---

11. [ப - ரை.] **विज्ञानात्मा** - ஜ்ஞாந ஸ்வரூபனாகிற ஜீவனும், **सर्वैः देवैस्सह** - வாக் முதலிய ஸகல இந்த்ரியங்களும், **प्राणाः** - முக்ய ப்ராணனும், **भूतानि** - மஹாபூதங்களும், **यत्र** - எந்தப் பரமாத்மாவினிடத்தில், **संप्रतिष्ठन्ति** - ப்ரதிஷ்டை பெற்று நிற்கின்றனவோ, **तदक्षरम्** - அந்த நிர்விகாரமான பரமாத்மாவை, **यो वेदयते** - எவன் அறிகிறானோ, **सोम्य** - ஹே ஶோபநமான பார்வையை உடையவனே, **सः** - அவன், **सर्वज्ञः** - எல்லாவற்றையும் அறிந்தவனாகிறான்; **सर्वमेव आविवेश** - ஸகலமான பதார்த்தங்களையும் ப்ரவிஷ்டனாக ஆகிறான். அதாவது: எல்லா லோகங்களிலும் ஸஞ்சரிக்கும் ஶக்தி வாய்ந்தவனாகிறான். "**कामचारी कामरूप्यनुसञ्चरन्**" என்று மற்றொரு ஶ்ருதியும் பேசுகின்றது.

நான்காம் ப்ரஶ்நம் முற்றிற்று.

http://acharya.org

॥ श्रीः ॥

॥ पञ्चमः प्रश्नः ॥

हरिः ओम् । अथ हैनं शैब्यस्सत्यकामः पप्रच्छ । "स यो ह वै तद्भगवन् मनुष्येषु प्रायणान्तमोङ्कारमभिध्यायीत कतमं वाव स तेन लोकं जयति ?" इति ॥

तस्मै स होवाच । एतद्वै सत्यकाम परञ्चापरञ्च ब्रह्म यदोङ्कारः । तस्माद्विद्वानेतेनैवायतनेन एकतरमन्वेति ॥ २ ॥

ஸ்ரீ:

ஐந்தாவது ப்ரஶ்நம்

இந்த ப்ரஶ்நத்தில் ப்ரணவ வித்யை என்று வ்யவஹரிக்கப்படும் ஒரு ப்ரஹ்ம வித்யை ப்ரஸ்தாவிக்கப்படுகின்றது. பகவானை அடைய வேண்டுமென்னும் இச்சை யுண்டாகி, அந்த இச்சையைப் பூர்த்தி செய்து கொள்ள ஒருவன் அபேக்ஷித்தால், அதற்கு ஸாதநங்களாக ப்ரஹ்ம வித்யைகளென்று வேதாந்த ஶாஸ்த்ரத்தில் பல உபாஸநங்கள் விதிக்கப் பட்டிருக்கின்றன. இந்த உபாஸநங்கள் பலவாக இருந்தாலும், எல்லா வற்றுக்கும் ப்ரஹ்ம ப்ராப்தியே பலமாக இருப்பதால், அவைகளுள் ஏதாவது ஒன்றை ஒருவன் அநுஷ்டித்தால் மோக்ஷத்தைப் பெறுவதற்கு அதுவே போதுமென்று ஶாஸ்த்ரம் சொல்லுகின்றது. இந்த ப்ரஹ்ம வித்யைகளை விதிக்கும் உபநிஷத்துக்களே, வேறு சில க்ஷுத்ர வித்யை களையும் உபதேஶிக்கின்றன. அவைகளைக் காம்ய வித்யை யென்று சொல்வார்கள். ஐஹிக போகங்களை அநுபவிக்க விருப்பமுள்ளவர்களுக்கு அவை உபகாரங்களாக இருக்கும். சிற்சில விடங்களில் அந்தக் காம்ய வித்யைகள் ப்ரதிபந்தகங்களையும் போக்கி ப்ரஹ்ம வித்யைக்கு உபகார மாகவும் இருக்கும். ப்ரணவத்தை ஹ்ரஸ்வமாக ஒரு மாத்ரையுடனாவது, தீர்க்கமாக இரண்டு மாத்ரைகளுடனாவது, இன்னும் தீர்க்கமாக மூன்று மாத்ரைகளுடனாவது எப்பொழுதும் உச்சரித்துக்கொண்டு ப்ரஹ்மத்தை உபாஸிப்பது உண்டு. இவைகளுள் மூன்றாவது உபாஸநம் ப்ரஹ்ம ப்ராப்திக்குக் காரணமாகும்; மற்றை இரண்டும், ஒன்று மநுஷ்ய லோகத்தில் பெருமையையும், மற்றொன்று தேவலோகத்தில் பெருமையையும் கொடுக்கும். இந்த விஷயமே இந்த ப்ரஶ்நத்தில் விவரிக்கப்படுகின்றது.

1. [ப-ரை.] **अथ**-பிறகு, **शैब्यस्सत्यकामः**-ஶிபியின் குமாரராகிய ஸத்ய காமன் என்பவர், **एनम्**-இவரை [பிப்பலாதரை], **पप्रच्छ**-கேட்டார். "**मनुष्येषु**-மநுஷ்யர்களுக்குள், **स यः**-எவனொருவன் [**सः** என்பது அதிகாரி ஸாமாந்யத்தைக் குறிக்கின்றது], **हे भगवन्**-ஹே பூஜ்யரே! **प्रायणान्तम्**-உயிர் போகும் பர்யந்தம், **तत् ओङ्कारम्**-ப்ரணவத்தை **अभिध्यायति**-உபாஸிக்கிறானோ, **सः**-அவன், **तेन**-அந்த ஓங்காரத்தினால், **कतमं लोकम्**-எந்த லோகத்தை, **जयति**-ஜயிக்கிறான்" **इति** என்று.

2. [ப-ரை.] **सः**-அந்தப் பிப்பலாதர், **तस्मै**-அந்த ஸத்யகாம

http://acharya.org

स यद्येकमात्रमभिध्यायीत स तेनैव संवेदितस्तूर्णमेव जगत्यामभिसंपद्यते। तमृचो मनुष्यलोकमुपनयन्ते। स तत्र तपसा ब्रह्मचर्येण श्रद्धया संपन्नो महिमानमनुभवति ॥

अथ यदि द्विमात्रेण मनसि संपद्यते सोऽन्तरिक्षं यजुर्भिरुन्नीयते। स सोमलोकः। स सोमलोके विभूतिमनुभूय पुनरावर्तते ॥

னுக்கு, **उवाच** - பதில் சொன்னார். "**हे सत्यकाम** - ஹே ஸத்யகாமனே! **ओङ्कार इति यत्** - ஓங்காரமென்று யாதொன்று உண்டோ, **एतद्वै परञ्च अपरञ्च ब्रह्म** - அதுவே உயர்ந்த ப்ரஹ்மம், அதுவே தாழ்ந்த ப்ரஹ்மம். [உயர்ந்த ப்ரஹ்மம் என்பதால் பரம புருஷார்த்தமாகிற பரமாத்மாவும், தாழ்ந்த ப்ரஹ்மம் என்பதால் க்ஷுத்ர புருஷார்த்தமாகிற ஜீவனும் சொல்லப்படுகின்றன. ஓங்காரமே இந்த ஆத்மாக்கள் என்று எப்படிச் சொல்லக்கூடும் என்றால், ஓங்காரம் வாசகமாகவும் ஆத்மாக்கள் அந்த வாசகத்தால் குறிக்கப்படும் வாச்யங்களாகவும் இருக்கிறபடியால், அந்த வாச்ய வாசக ஸம்பந்தத்தைக் கொண்டு 'அதுவே இது' என்று ஸாமாநாதிகரண்யம் பேசப்படுகின்றது. ஶரீர ஶரீரி ஸம்பந்தத்தைக்கொண்டும் கார்ய காரண ஸம்பந்தத்தைக்கொண்டும் ஸாமாநாதிகரண்யம் சொல்வது போல வாச்ய வாசக ஸம்பந்தத்தைக்கொண்டும் ஸாமாநாதிகரண்யம் சொல்லக்கூடும்.] **तस्मात्** - ஆகையால், **विद्वान्** - உபாஸிக்கிறவன், **अनेनैव आयतनेन** - இந்த த்யாநத்தின் பலமாகவே, **एकतरम्** - பரப்ராஹ்மம் அபரப்ரஹ்மம், இவைகளுள் ஒன்றை, **अन्वेति** - அடைகிறான். [தாத்பர்யமென்னவென்றால், ஓங்காரத்தை உச்சரிப்பது மூன்று விதமாகும்; ஒரு விதமாக உச்சரித்து உபாஸித்தால் பரமாத்மாவாகிற பரம புருஷார்த்தத்தையும், மற்ற இரண்டு விதமாக உபாஸித்தால் அபரப்ரஹ்மத்தையும் [அதாவது: க்ஷுத்ர புருஷார்த்தங்களையும்] அடைகிறான் என்பதுதான்.

---

3. [ப - ரை.] **सः** - அந்த உபாஸகன், **एकमात्रं अभिध्यायीत यदि** - ஹ்ரஸ்வமான ஒரு மாத்ரையுடைய ப்ரணவத்திற்கு வாச்யமாயிருக்கும் அபரப்ரஹமத்தை உபாஸித்தால், **सः** - அவன், **तेनैव** - அந்த அபர ப்ரஹ்மத்யாநத்தின் பலமாக, **संवेदितः**-ஸத்தை பெற்று, **तूर्णमेव** - ஶீக்ரத்திலேயே, **जगत्यां** - இந்தப் பூமியில், **अभिसंपद्यते** - ஶ்ரேஷ்டனாக ஆகிறான். **तम्** - அவனை, **ऋचः** - ருக் மந்த்ரங்கள், **मनुष्यलोकम्** - மநுஷ்ய லோகத்திற்கு, **उपनयन्ते** - ப்ராபிக்கின்றன; **सः** - அவன், **तत्र** - அந்த மநுஷ்ய லோகத்தில், **तपसा** - தபஸ்ஸினாலும், **ब्रह्मचर्येण** - ப்ரஹ்மசர்யத்தாலும், **श्रद्धया** - ஆஸ்திக்ய புத்தியாலும், **संपन्नः** - நிறைந்தவனாய், **महिमानम्** - பெருமையை, **अनुभवति** - அடைகிறான்.

---

4. [ப - ரை.] **अथ यदि द्विमात्रेण मनसि संपद्यते** - அந்த ப்ரணவத்தையே இரண்டு மாத்ரையுடன் உச்சரித்துக்கொண்டு அந்த அபர ப்ரஹ்

http://acharya.org

यः पुनरेतं त्रिमात्रेणैवोमित्यनेनैवाक्षरेण परं पुरुषमभिध्यायीत स तेजसि सूर्ये संपन्नो यथा पादोदरस्त्वचा विनिर्मुच्यते, एवं ह वै स पाप्मना विनिर्मुक्तः स सामभिरुन्नीयते ब्रह्मलोकम् । स एतस्माज्जीवघनात् परात्परं पुरिशयं पुरुषमीक्षते । तदेतौ श्लोकौ भवतः ॥ ५ ॥

तिस्रो मात्रा मृत्युमन्त्यः प्रयुक्ताः अन्योन्यसक्ता अनविप्रयुक्ताः ।
क्रियासु बाह्यान्तरमध्यमासु सम्यक्प्रयुक्तासु न कम्पते ज्ञः ॥ ६ ॥

மத்தைத் த்யாநம் செய்யும்பக்ஷத்தில், **सः** - அவன், **यजुर्भिः** - யஜுர் மந்த்ரங்களால், **अन्तरिक्षमुन्नीयते** - ஆகாஶத்திற்குக் கொண்டுபோகப்படுகிறான். [அதாவது: த்யு லோகத்தை ஆஶ்ரயித்திருக்கும் ஸோம லோகமென்னும் லோகத்தை அடைகிறான்]. **सः** - அவன், **सोमलोके** - அந்த ஸோம லோகத்தில், **विभूतिम्** - ஐஶ்வர்யத்தை, **अनुभूय** - அநுபவித்துவிட்டு, **पुनरावर्तते** - மறுபடியும் [மநுஷ்ய லோகத்திற்குத்] திரும்பி வருகிறான்.

---

5. [ப - ரை.] **यः पुनः** - எவனொருவன், **त्रिमात्रेण** - மூன்று மாத்ரைகளுடன், **'ओम्' इत्यनेनैवाक्षरेण** - 'ஓம்' என்னும் அந்த அக்ஷரத்தைக் கொண்டே, **परं पुरुषमभिध्यायीत** - பரமாத்மாவையே இடைவிடாமல் த்யாநம் செய்கிறானோ, **सः** - அவன், **तेजसि सूर्ये संपन्नः** - தேஜோ மண்டலமாகிற ஸூர்யனுடன் சேர்ந்து, **यथा** - எப்படி, **पादोदरः** - ஸர்ப்பமானது, **त्वचा विनिर्मुच्यते** - பழைய சட்டையிலிருந்து விடப்படுகின்றதோ, **एवम्** - அவ்விதமே, **सः** - அவன், **पाप्मना विनिर्मुक्तः** - பாபத்திலிருந்து விடப்பட்டவனாய், **सामभिः** - ஸாம மந்த்ரங்களால், **ब्रह्मलोकम्** - பகவல்லோகத்திற்கு, **उन्नीयते** - கொண்டு போகப்படுகிறான். **सः** - அவன், **एतस्मात्** - இந்த, **जीवघनात्** - ஸம்ஸார மண்டலத்தைக் காட்டிலும் [அதாவது: இந்த ஸம்ஸார தசையைக் காட்டிலும், இந்த ஶப்தம் கர்ம நிமித்த தேஹிகளைக் குறிக்கும். ஆகையால் இவ்விடத்தில் ஸம்ஸார மண்டலம் என்னும் அர்த்தத்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றது] **परात्**-உத்க்ருஷ்டமான [ஶுத்தாத்ம ஸ்வரூபம் யாதொன்று உண்டோ அதைக்காட்டிலும்] **परम्** - உத்க்ருஷ்டமான, **पुरिशयम्** - எல்லா ப்ராணிகளிலும் அந்தராத்மாவாக ஶயநித்துக்கொண்டிருக்கும், **पुरुषम्** - புருஷஶப்த வாச்யனான பகவானை, **ईक्षते** - பார்க்கிறான். **तत्** - அதைப்பற்றி [அந்த ஓங்காரத்தைப்பற்றி] **श्लोकौ भवतः** - இரண்டு ஶ்லோகங்கள் இருக்கின்றன.

---

6. [ப - ரை.] **अत्यन्तसक्ताः** - அத்யந்தம் த்வரிதமான உச்சாரணத்தால் ஒரு அக்ஷரத்துடன் மற்றொன்று சேர்ந்தும், **अनविप्रयुक्ताः** - அத்யந்தம் விளம்பித்து உச்சரிப்பதால் ஒரு அக்ஷரம் மற்றொன்றுடன் மிகவும் பிரிந்து நின்றும், **प्रयुक्ताः** - உச்சரிக்கப்படும், **तिस्रो मात्राः** - மூன்று

http://acharya.org

ऋग्भिरेवं यजुर्भिरन्तरिक्षं स सामभिर्यत्तत्कवयो वेदयन्ते ।
तमोङ्कारेणैवायतनेनान्वेति विद्वान् यत्तच्छान्तमजरममृतमभयं परञ्चेति ॥ ७ ॥

इति पञ्चमः प्रश्नः ॥

மாத்ரைகள் [மூன்று மாத்ரைகளுடன் உச்சரிக்கப்படும் மந்த்ரம்], **मृत्युमन्त्यः** - அநர்த்தாவஹங்கள். **बाह्याभ्यन्तरमध्यमासु क्रियासु** - பாஹ்யங்களான யஜ்ஞம் முதலிய க்ரியைகள், ஆந்தரங்களான மாநஸிக வ்யாபாரங்கள், நடுத்தரமான வாசக ஜபங்கள், இவைகள், **सम्यक्प्रयुक्तासु [सतीषु]**- அத்யந்த ஸம்யோகம் அத்யந்த வியோகமின்றிக்கே ப்ரயோகம் செய்யப்பட்டால், **ज्ञः** - அதன் யோகத்தை அறிந்த உபாஸகன், **न कम्पते** - பலத்திலிருந்து நழுவுகிறானில்லை.

---

7. [ப - ரை.] **स विद्वान्** - அந்த உபாஸகன், **ऋग्भिः** - ருக் மந்த்ரங்களால், **एतम्**- இந்த லோகத்தையும், **यजुर्भिः** - யஜுர் மந்த்ரங்களால், **अन्तरिक्षम्**-த்யு லோகத்தையும், **सामभिः** - ஸாம மந்த்ரங்களால் **यत्तत्कवयो वेदयन्ते** - ஸூரிகளால் எப்பொழுதும் பார்க்கப்பட்டுக்கொண்டிருக்கும் பகவல்லோகத்தையும், **तम्** - இந்த ஸ்தாநத்தையெல்லாம், **ओङ्कारेणैव आयतनेन** - ஓங்கார மார்க்கத்தாலேயே, **अन्वेति** - போகிறான். **शान्तम्** - ஆறு விதங்களான காலுஷ்யங்களால் விடப்பட்டதாயும், **अजरम् अमृतम्** - ஜரா மரண ஸம்ந்யமாயும், **अभयम्** - எவ்வித பயத்திற்கும் ஆஸ்பதமற்றதாயும், **परम्** - ஸர்வோத்க்ருஷ்டமான [ப்ரஹ்மத்தை], **प्राप्नोति** - அடைகிறான்.

இந்த ப்ரஶ்ந வாக்யங்கள் ஸ்ரீ பாஷ்யத்தில் ஈக்ஷதி கர்மாதிகரணத்தில் உதாஹரிக்கப்பட்டு இவைகளின் அர்த்தமும் அவ்விடத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றது. 'இந்த உபநிஷத்தில் நிர்த்தேஶிக்கப்பட்டிருக்கும் பரமபுருஷன் பரமாத்மாவன்று; சதுர்முக ப்ரஹ்மாவே இந்தப் பரமபுருஷ ஶப்தத்தால் நிர்த்தேஶிக்கப்படுகிறான்' என்பது இங்கு சொல்லப்படும் பூர்வபக்ஷம். பூர்வ பக்ஷிகள் சொல்லும் ஹேதுக்களாவன: (1) மநுஷ்ய லோகம் அந்தரிக்ஷ லோகம் ப்ரஹ்ம லோகம் என்று இருக்கும் க்ரமத்தைப் பார்க்கும் பொழுது, மநுஷ்ய லோகத்திற்கு அடுத்திருக்கும் அந்தரிக்ஷலோகம் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருப்பது போல, அந்தரிக்ஷ லோகத்திற்கு அடுத்திருக்கும் ஒரு லோகமே அதற்கு மேல்பட்டிருப்பதாகச் சொல்லப்பட வேண்டும். சதுர்முக ப்ரஹ்மாவின் லோகமே அந்தரிக்ஷத்திற்கு அடுத்து இருக்கிறபடியால், இவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கும் ப்ரஹ்மலோக ஶப்தம் அந்தச் சதுர்முக ப்ரஹ்ம லோகத்தையே நிர்த்தேஶிக்க வேண்டும். இது அவர்களாற் சொல்லப்படும் முதல் ஆக்ஷேபம்.

http://acharya.org

இரண்டாவது ஆக்ஷேபம். 5-வது மந்த்ரத்தில் “**एतस्माज्जीवघनात्परात्परं पुरुषम्**” என்று அந்த லோகத்தின் புருஷன் பேசப்படுகிறான். தேஹம் இந்த்ரியம் இவைகளுடன்கூடப் பளுவாகச் செய்யப்பட்டிருக்கின்றான் ஜீவ வ்யஷ்டி புருஷன்; அவனைக் காட்டிலும் ஜீவ ஸமஷ்டி புருஷனாயிருக்கும் சதுர்முகன் உயர்ந்தவனாகையால், அவனே இவ்விடத்தில் ‘ஜீவ கநத்தைக் காட்டிலும் பரன்’ என்னும் ஶப்தத்தால் நிர்த்தேஶிக்கப்படுகிறானென்று சொல்வதே உபபந்நம். இப்படி இந்தக் காரணங்களால் சதுர்முக ப்ரஹ்மாவுக்கே இவ்விடத்தில் நிர்த்தேஶமென்று நிஶ்சயித்துவிட்டால், ‘அஜரம்,’ ‘அமரம்’ முதலிய பதங்களுக்கு அந்த ஜீவ தத்வத்திற்கு ஒத்து வரும்படி வேறு விதமாகப் பொருள் கொண்டு விடலாம்.

இதுதான் பூர்வ பக்ஷிகளின் வாதம். இதற்கு ஸமாதாநமாவது :—(1) ‘அஜரம்’ ‘அம்ருதம்’ என்னும் ஶப்தங்கள் பரமாத்மாவுக்கே அந்வயிக்கும் என்பது ‘**एतदभयमेतदमृतमेतद्ब्रह्म**’ இத்யாதியான வேறு ஶ்ருதி வாக்யங்களால் வ்யக்தமாக ஏற்படுகிறபடியால், இவை ஜீவனுக்கு ஒட்டமாட்டா. (2) சதுர்முக ப்ரஹ்மாவும் ‘ஜீவகநன்.’ ‘ஜீவகநன்’ எனும் ஶப்தம், கர்ம நிமித்தமாக எவனுக்குத் தேஹாதிகள் உண்டாகின்றனவோ அவனையே குறிக்கும். சதுர்முக ப்ரஹ்மாவின் தேஹம் முதலியவை கர்ம நிமித்த மாகையால், அவனும் ‘ஜீவகநனே’ ஆவான். ப்ரக்ருத புருஷன் அவனைக் காட்டிலும் உயர்ந்தவன் என்று சொல்லப்பட்டிருக்கிறபடியால், அவன் பரமாத்மாவாகவே இருத்தல் வேண்டும். (3) அந்தரிக்ஷ லோகத்திற்கு அவ்யவஹிதமாக அடுத்து நிற்பது சதுர்முக ப்ரஹ்மலோகமே என்று சொல்வதும் சரியன்று. ஏனென்றால்: சதுர்முக லோகத்திற்கும் அந்த லோகத்திற்கும் நடுவில் ஸ்வர்க்க லோகம் முதலியவை இருக்கின்றன. நிற்க: சதுர்முக லோகமானது “**आब्रह्मभुवनाल्लोकाः पुनरावर्तिनोऽर्जुन**” என்கிறபடி நாஶமடையக் கூடிய லோகமன்றோ? அதை அஜரமென்றும் அபயமென்றும் எப்படிச் சொல்லக் கூடும்? (4) பாம்பு தோலைவிட்டு வெளிக் கிளம்புவதுபோல, உபாஸகன் தனது புண்ய பாபங்களிலிருந்து வெளிக் கிளம்பி இந்த ப்ரஹ்ம லோகத்தை அடைகிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறதே. க்ஷயிஷ்ணுவான சதுர்முக லோகம் அப்படிப்பட்டவனுக்கு ப்ராப்யமான லோகம் என்று சொல்வது எப்படி உபபந்நமாகும்? (5) ஏழாவது மந்த்ரமாகிற உதாஹரண ஶ்லோகத்தில் இந்த லோகத்தை விவரிக்குமிடத்தில் “**यत्तत्कवयो वेदयन्ते**” [எது ஸூரிகளுக்கு த்ருஶ்யமோ] என்னும் விவரணத்தைக் காண்கிறோம். அப்படி ஸூரிகளால் எப்பொழுதும் பார்க்கப்படும் லோகம் “**तद्विष्णोः परमं पदं सदा पश्यन्ति सूरयः**” என்கிறபடி விஷ்ணு லோகமே. இந்தக் காரணங்களால் “**पुरुषमीक्षते**” [புருஷனைப் பார்க்கிறான்] என்று சொல்லப்படுமிடத்தில், பார்க்கப்படுபவன் ஜீவனைக் காட்டிலும் வேறுபட்டிருக்கும் பரம புருஷனே. இதுதான் ஸித்-

http://acharya.org

தாந்தம். இவ்விடத்தில் '**ईक्षते**' என்பதும் '**ध्यायीत**' என்பதும் ஒரே பொருளைக் கொண்டவை என்பதும் கவனிக்கத் தகுந்தது.

'இந்த உபநிஷத்தில் ஓங்காரம் ஒரு மாத்ரையுடன் உச்சரிக்கப் படத் தகுந்ததாகப் பேசப்பட்டிருக்கிறதே! ஸம்ஸ்க்ருத பாஷையில் 'ஏ ஐ ஓ' இவை மூன்றும் எப்பொழுதும் தீர்க்கங்க ளல்லவா! எப்படி அவைகளை ஹ்ரஸ்வமாக உச்சரிக்கக்கூடும்?' என்று ஒரு ஸந்தேஹம் உண்டாகலாம். இதற்கு ஸமாதாநம்: 'ஶாஸ்த்ரத்தில் ஹ்ரஸ்வம் சொல்லப்படாவிடினும் லோக வழக்கில் ஹ்ரஸ்வ முண்டு. அதை அவலம் பித்து இவ்விடத்தில் ஹ்ரஸ்வம் சொல்லப்பட்டிருக்கின்றது' என்பதே.

ஐந்தாவது ப்ரஶ்நம் முற்றிற்று.

http://acharya.org

|| श्रीः ||

|| षष्ठः प्रश्नः ||

हरिः ओम् । अथ हैनं सुकेशा भारद्वाजः पप्रच्छ । "भगवन् हिरण्यनाभः कौसल्यो राजपुत्रो मामुपेत्यैतं प्रश्नमपृच्छत, 'षोडशकलं भारद्वाज पुरुषं वेत्थ ?' । तमहं कुमारमब्रवं, 'नाहमिमं वेद । यद्यहमिममवेदिषं कथं ते नावक्ष्यम् ? समूलो वा एष परिशुष्यति योऽनृतमभिवदति । तस्मान्नार्हाम्यनृतं वक्तुम्' इति । स तूष्णीं रथमारुह्य प्रवव्राज । तं त्वा पृच्छामि 'क्वाऽसौ पुरुषः' इति ॥ १ ॥

ஸ்ரீ :

ஆறாவது ப்ரஶ்நம்

இந்த ப்ரஶ்நத்தில் விசாரிக்கப்படும் விஷயமாவது :—'பதினாறு கலைகளையுடைய புருஷன் யார் ? அவன் எங்கு இருக்கிறான் ?' என்பது தான். அப்படி அவன் இருக்கு மிடத்தைக் கேட்பதன் கருத்து, 'அவன் யார்? ஜீவனா? பரமாத்மாவா?' என்பதே. கலை என்றால் அவயவம். நாலாவது மந்த்ரத்தில் இந்தப் பதினாறு கலைகளும் உதாஹரிக்கப்பட்டிருக்கின்றன. அவை:—(1) ப்ராணன், (2) ஶுப கர்மத்தில் ப்ரவ்ருத்தி செய்வதற்கு ஹேதுவாக இருக்கும் ஶ்ரத்தை, (3—7) ஐந்து மஹா பூதங்கள், (8) இந்த்ரியங்கள், (9) மநஸ், (10) அந்நம், (11) வீர்யம், (12) தபஸ், (13) விஶுத்தி ஸாதநமாக இருக்கும் மந்த்ரங்கள், (14) அந்த மந்த்ரங்களைக் கொண்டு செய்யப்படும் அக்நிஹோத்ரம் முதலிய கர்மங்கள், (15) அந்தக் கர்மங்களின் பலமாகிற லோகங்கள், (16) அந்த லோகங்களில் ஸ்ருஷ்டிக்கப்படும் ப்ராணிகளின் பெயர்கள் ஆகப் பதினாறு அவயவங்கள். இந்த அவயவங்களை யுடையவன் என்றால் என்ன ? இவைகளை ஸ்ருஷ்டித்தவன் என்பது பொருளா? இவைகளை அநுபவிக்கிறவன் என்பது பொருளா? ஸ்ருஷ்டித்தவன் என்னும் பொருளைக் கொண்டால், இவைகளுக்கு ஸ்ரஷ்டாவாக இருக்கிறவன் பரமாத்மா வாகையால், அப்பொழுது அது பரமாத்மாவையே குறிக்கும். அநுபவிக்கிறவன் என்று பொருள் கொண்டால், இவைகளைக் கர்ம பலமாக அநுபவிக்கிறவன் ஜீவ னாகையால், அப்பொழுது அது ஜீவனையே குறிக்கும். இரண்டாவது கருத்தே இவ்விடத்தில் விவக்ஷிதம் என்பது நமது ஆசார்யர்களால் செய்யப்படும் நிர்ணயம். பரமாத்மாவே ஜீவனாகத் தோன்றுகிறான் என்று சொல்வதும், ஜீவாத்மாவைக் காட்டிலும் விலக்ஷணனான பரமாத்மா என்று மற்றொரு தத்வம் இல்லை என்று சொல்வதும் ஶ்ருதியின் உட்கருத் தன்று என்பது இந்த ப்ரஶ்நத்திலிருந்து விளங்குகின்றது.

---

1. [ப-ரை.] **अथ ह** - பிறகு, **भारद्वाजः सुकेशा** - பரத்வாஜருடைய

http://acharya.org

तस्मै स होवाच । "इहैवान्तश्शरीरे सोम्य स पुरुषो यस्मिन्नेताः षोडश-कलाः प्रभवन्ति" इति ॥ २ ॥

குமாரராகிய ஸுகேஶர் என்பவர், **एनम्** - இவரை [பிப்பலாதரை], **पप्रच्छ** - கேட்டார். "**भगवन्** - ஹே பகவந் **हिरण्यनाभः** - ஹிரண்ய நாப னென்னும், **कौसल्यः** - கோஸல தேஶாதிபதியாகிற, **राजपुत्रः** - ராஜ குமாரன், **माम्** - என்னிடம், **उपेत्य** - வந்து, **एतं प्रश्नम्** - இந்தக் கேள்வியை, **अपृच्छत** - கேட்டான். [அந்தக் கேள்வி என்னவென்றால்:— **भारद्वाज** - ஹே பரத்வாஜரே, **षोडशकलं पुरुषम्** - பதினாறு கலைகளையுடைய புருஷனை, **वेत्थ**-அறிவீரா?" [என்பதுதான் அந்தக் கேள்வி]. **तं कुमारम्** - அந்த ராஜ குமாரனுக்கு, **अहमब्रवम्** - நான் பதில் சொன்னதாவது :— '**अहम्** - நான், **इमम्** - இதை, **न वेद** - அறியவில்லை. **यदि अहमिमम् अवेदिषम्** - நான் இதை அறிந்திருந்தால், **कथं ते नावक्ष्यम्** - உமக்கு அதை எப்படிச் சொல்லாமல் இருப்பேன்?' **इति** - என்று. [பதில் சொன்னேன். அப்பொழுது அந்த ராஜகுமாரன் முகத்தில் வாட்ட முண்டானதைப் பார்த்து நான் சொன்னதை அவன் நம்பவில்லைபோல் இருக்கின்றது என்று எண்ணி, மறுபடியும் சொன்னேன்.] '**यः अनृतमभिवदति** - எவன் பொய் சொல்லுகிறானோ, **एषः** - அவன், **समूलो वा** - எல்லா ப்ரகாரங்களிலும், **परिशुष्यति** - ஶோஷத்தை அடைந்து விடுவான் [க்ஷேமத்தை அடையமாட்டான்.] **तस्मात्** - ஆகையால், **अनृतं वक्तुन्नार्हामि** - பொய் சொல்லமாட்டேன்' [என்று பதில் சொன்னேன்.] **सः** - அந்த ராஜ குமாரன், **तूष्णीम्** - எவ்வித பதிலும் சொல்லாமல், **रथमारुह्य** - ரதத்தில் ஏறிக்கொண்டு, **प्रवव्राज** - போய்விட்டான். [இதிலிருந்து அவன் அத்ருப்தனாகப் போனானென்று தெரிகின்றது.] '**कासौ पुरुष इति** - அந்தப் [பதினாறு கலைகளுடன் கூடிய] புருஷன் எங்கு இருக்கிறான்? அவன் யார்? என்று, **तं** - அவனைப்பற்றி, **त्वा** - உம்மை, **पृच्छामि** - கேட்கிறேன்' **इति** - என்று. [இப்படி அந்தப் பதினாறு கலைகளோடு கூடினவன் எங்கே இருக்கிறான் என்ற கேள்வியின் வழியாக அது ஜீவனா? பரமாத்மாவா? என்பதே கேட்கப்பட்டதாகின்றது.]

---

2. [ப-ரை.] **स ह** - அவர் [பிப்பலாதர்], **तस्मै** - அவனுக்கு [ஸுகேஶனுக்கு], **उवाच** - [பதில்] சொன்னார். "**सोम्य** - ஹே ஸோம்யனே, **यस्मिन्** - எவனிடத்தில், **एताः षोडश कलाः** - இந்தப் பதினாறு கலைகளும், **प्रभवन्ति** - ஸமர்த்தங்களாக இருக்கின்றனவோ, **स पुरुषः** - அந்தப் புருஷன், **इहैव अन्तश्शरीरे** - இவ்விடத்திலேயே, [ஶரீரத்திற்குள்ளேயே] [**वर्तते** - இருக்கிறான்,]" **इति** - என்று. [இவ்விடத்தில் **प्रभवन्ति** என்னும் ஶப்தம் ப்ரயோகம் செய்யப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது. அதன் பொருள் 'ஸமர்த்தங்களாக இருக்கின்றன' என்பதாகையால், 'எந்த விஷயத்தில் ஸமர்த்தங்கள்?' என்னும் ஆகாங்க்ஷை ஏற்படும். அதற்கு,

http://acharya.org

स ईक्षांचक्रे 'कस्मिन्नहमुत्क्रान्त उत्क्रान्तो भविष्यामि ? कस्मिन् वा प्रतिष्ठिते प्रतिष्ठास्यामि' इति ॥ ३ ॥

" स प्राणमसृजत, प्राणाच्छ्रद्धां खं वायुर्ज्योतिरापः पृथिवीन्द्रियम् । मनोऽन्नमन्नाद्वीर्यन्तपो मन्त्राः कर्म लोकाः लोकेषु च नाम च ॥ ४ ॥

'இந்தப் பதினாறு கலைகளும் தமது ஸம்யோகத்தால் ஸுகம் துக்கம் முதலிய போகங்களைக் கொடுத்து உபகரிப்பதில் ஸமர்த்தங்கள்' என்பதே உபபந்நமான ஸமாதாநமாகக்கூடும். அதாவது: ஷோடஶ கலன் கர்ம வஶன் என்று சொன்னதாயிற்று. ஆகையால் அவன் ஜீவனாகவே இருத்தல் வேண்டும்.

---

3. [ப-ரை.] **सः** - அவர் [ஸுகேஶர்], **ईक्षाञ्चक्रे** - ஆலோசித்தார். [அந்த ஆலோசனையாவது:] '**कस्मिन् उत्क्रान्ते** - எவன் வெளிப்படும் பொழுது, **अहमुत्क्रान्तो भविष्यामि** - நானும் வெளிப்பட்டவனாக ஆகிறேனோ; **कस्मिन् वा प्रतिष्ठिते** - எவன் நிலைபெற்று நிற்கும்பொழுது, **प्रतिष्ठास्यामि** - நானும் நிலைபெற் றிருக்கிறேனோ; [அவன் எவனாக இருத்தல் வேண்டுமென்று ஆலோசித்துப் பார்த்தான் என்பது பொருள்.] ப்ராணன் முதலிய கலைகள், ஜீவன்களுடைய போகத்திற்காகவே அவர்களுடைய கர்மாநுகுணமாக ஸ்ருஷ்டிக்கப்பெற்று அவைகளின் போகத்திற்காகவே இருத்தல் வேண்டும். பரமாத்மாவுக்கு இம்மாதிரியான உபகாரமொன்றும் ஸம்பவியாதாகையால், அவை அவனுடைய போகத்திற்காக இருக்கமாட்டாவன்றோ?

---

4. இதற்குமேல், ப்ரஶ்நம் முடிவு பர்யந்தம் இருக்கும் வாக்யங்கள் பிப்பலாதருடைய உபதேசத்தின் தொடர்ச்சி.

[ப-ரை.] "**सः** - அவனன்றோ [அந்த ஜீவனே], **प्राणम्** - [தன்னுடன் வெளியேறுவது தன்னுடன் நிலைபெற்று நிற்பது ஆக இம்மாதிரியான ப்ரவ்ருத்தியை யுடைய] முக்ய ப்ராணனை, **असृजत** - ஸ்ருஷ்டித்தான். **प्राणात्** - அந்த முக்ய ப்ராணனிலிருந்து, **श्रद्धाम्** - ஆஸ்திக்ய புத்தியை. [ஸ்ருஷ்டித்தான்.] **खम्** - ஆகாஶத்தையும், **वायुः** - வாயுவையும், **ज्योतिः** - அக்நியையும், **आपः** - ஜலத்தையும், **पृथिवी** - பூமியையும், **इन्द्रियम्** - இந்த்ரியங்களையும், **मनः** - மநஸ்ஸையும், **अन्नम्** - [நெல் முதலிய தாந்யங்களாகிற] அந்நத்தையும், **अन्नात्** - அந்த அந்நத்திலிருந்து **वीर्यम्** - [ஶரீரம் இந்த்ரியம் இவைகளின் ஸாமர்த்ய ரூபமான] வீர்யத்தையும், **तपः** - தபஸ்ஸையும், **मन्त्राः** - மந்த்ரங்களையும், **कर्म** - [ஜ்யோதிஷ்டோமம் முதலிய] கர்மங்களையும், **लोकाः** - [அக் கர்மங்களால் அடையக்கூடிய] லோகங்களையும், **लोकेषु** - அந்த லோகங்களில், **नाम च** - பெயரையும், **असृजत** - ஸ்ருஷ்டித்தார்.

http://acharya.org

"स यथेमा नद्यस्स्यन्दमानाः समुद्रायणाः समुद्रं प्राप्यास्तं गच्छन्ति, भिद्येते तासान्नामरूपे, समुद्र इत्येव प्रोच्यते ; एवमेवास्य परिद्रष्टुरिमाः षोडश कलाः पुरुषायणाः पुरुषं प्राप्यास्तं गच्छन्ति, भिद्येते तासान्नामरूपे, पुरुष इत्येव प्रोच्यते । स एषोऽकलोऽमृतो भवति । तदेष श्लोकः ॥ ५ ॥

[இந்த வாக்யத்திலுள்ள முதல் வேற்றுமைச் சொற்களுக்கெல்லாம் இரண்டாம் வேற்றுமைப் பொருள் கொள்ளவேண்டும். 'ப்ராணனிடமிருந்து ஶ்ரத்தை ஸ்ருஷ்டிக்கப்பட்டது' என்றும், 'அந்நத்திலிருந்து வீர்யம் ஸ்ருஷ்டிக்கப்பட்டது' என்றும், இந்த இரண்டு இடங்களில் மாத்ரம் எதிலிருந்து ஸ்ருஷ்டி ஏற்படுகின்றது என்பது குறிக்கப்பட்டிருக்கின்றது. இதை ஆதாரமாகக்கொண்டு மற்றை இடங்களிலும் இம்மாதிரி முன்னிருக்கும் ஶப்தங்களுக்கு வேற்றுமை மாற்றி அதை அநுஷங்கம்செய்துகொண்டு அர்த்தம் கொள்ளலாம். அதாவது: ப்ராணனிடமிருந்து ஶ்ரத்தை, ஶ்ரத்தையிலிருந்து ஆகாஶம், ஆகாஶத்திலிருந்து வாயு, இம்மாதிரி சேர்த்துக்கொள்வது ந்யாய விருத்தமாக மாட்டாது. இந்தப் பதினாறு கலைகளும் ஜீவனுக்கு உபகாரகங்கள். அவை ஜீவன்களுடைய கர்மத்துக்குத் தகுந்தபடி அவர்களுக்கு லோகத்தைக் கொடுப்பதற்காகப் பரிணாமத்தை அடைகின்றன. இவைகளின் ஸ்ருஷ்டியைச் செய்கிறவன் ஸாக்ஷாத் பரமாத்மாவாக இருந்தபோதிலும், ஜீவன்களுடைய கர்மமும் அதற்கு நிமித்தமாகிறபடியால், ஜீவன்களை இவைகளின் ஸ்ருஷ்டி கர்த்தாவாகப் பேசுவது அநுபபந்நமன்று. அப்படியே இவ்விடத்தில் பேசப்பட்டிருக்கின்றதென்று நாம் அறியவேண்டும். அதாவது: ஜீவன்கள் இவைகளின் போக்தாவாகிறான்; அந்தக் காரணத்தைக் கொண்டு அந்த ஜீவன்களை நாம் (**षोडशकलः**) பதினாறு கலைகளை உடையவன் என்று சொல்லுகிறோம். பரமாத்மா அப்படிப் போக்தாவாகிறானில்லையாதலால், அவனை 'ஷோடஶகலன்' என்று நாம் சொல்லுகிறோமில்லை.]

---

5. கீழ் விவரித்திருக்கிற ப்ரகாரம் பரமாத்மா ஷோடஶகலன் ஆகிறானில்லையென்பதும், அவன் முமுக்ஷுக்களாக உபாஸிக்கத் தகுந்தவன் என்பதும், இந்த மந்த்ரத்தில் ஒரு த்ருஷ்டாந்தத்தின் வழியாக விளக்கப்படுகின்றன.

[ப - ரை.] **प्रस्रवन्त्यः** - ப்ரவஹித்துக் கொண்டிருக்கும், **इमा नद्यः** - [கங்கை முதலிய] இந்த நதிகள், **समुद्रायणाः** - ஸமுத்ரத்தை ஆதாரமாகக் கொண்டு [அதாவது: ஸமுத்ரத்துடன் பிரிவின்றிக்கே ஒன்றாகக் கலந்து], **समुद्रं प्राप्य** - ஸமுத்ரத்தை அடைந்து, **अस्तं गच्छन्ति** - கண்ணுக்குத் தெரியாமல் கலந்துவிடுகின்றன; [நதிகள் ஸமுத்ரத்தில் எவ்வித அபிவ்ருத்தியையும் செய்யாமலே தாமும் ஸமுத்ரத்தோடு ஸமுத்ரமாகவே ஆகிவிடுகின்றன]; **तासां** - அந்த நதிகளுடைய, **नामरूपे** -

http://acharya.org

अरा इव रथनाभौ कला यस्मिन् प्रतिष्ठिताः ।
तं वेद्यं पुरुषं वेद मा वो मृत्युः परिव्यथाः ।" इति ॥ ६ ॥

तान् होवाच "एतावदेवाहमेतत्परं ब्रह्म वेद नातःपरमस्ति" इति ॥७॥

ते तमर्चयन्तः "त्वं हि नः पिता योऽस्माकमविद्यायाः परं पारं तारयसि" इति । नमः परमर्षिभ्यो नमः परमर्षिभ्यः ॥ ८ ॥

इति षष्ठः प्रश्नः ॥

பெயரும் உருவமும், **भिद्येते** - மாறிவிடுகின்றன ; **समुद्र इत्येव प्रोच्यते** - முழுவதும் ஸமுத்ரமென்றே பேசப்படுகின்றது ; **स यथा** - இது த்ருஷ்டாந்தம். **एवमेव** - இம்மாதிரியே, **अस्य परिद्रष्टुः** - போக்தாவாகிற இந்த ஜீவனுக்கு, **इमाः** - இந்த, **षोडशकलाः पुरुषायणाः** - புருஷனை ஆதாரமாகக் கொண்டு [அதாவது : புருஷனை ஆதாரமாகக் கொண்டு நிற்கும் ஷோடஶ கலர்கள் என்று சொல்லப்படும் ஜீவர்களை அவனுடைய ஸங்கல்பாதீநங்களாகக் கொண்டு], **पुरुषं प्राप्य** - அந்தப் புருஷனை அடைந்து, **अस्तं गच्छन्ति** - மறைந்து விடுகின்றன. [அதாவது : போகத்தின் பொருட்டு ஆகின்றனவில்லை]. **तासां** - அவர்களுடைய, **नामरूपे** - பெயரும் உருவமும், **भिद्येते** - மாறிவிடுகின்றன. [இந்தக் கலைகள் ஜீவன் விஷயத்தில் போகத்திற்கு உபகரணங்களா யிருப்பவை போல், பரமாத்ம விஷயத்தில் இல்லை]; **पुरुष इत्येव प्रोच्यते** - புருஷனென்றே சொல்லப்படுகின்றான். [ஆகையால், **स एषः** - அந்தப் பரமாத்மா, **अकलः** - அவயவ மற்றவனென்றும், **अमृतः** - மரண மற்றவனென்றும், **भवति**, சொல்லப்படுகிறான் ; **तत्**-அதைக் குறித்து [அதாவது: அந்தப் பரமாத்மாவைக் குறித்து, **एष श्लोकः** - இந்த ஶ்லோகம் [படிக்கப்படுகின்றது.]

---

6. [ப - ரை.] **अराः** - [சக்ரத்தின்] ஆரக் கால்கள், **रथनाभाविव**- சக்ரத்தின் குடத்தில் போல, **कलाः** - [கீழ்க் குறிக்கப்பட்ட] கலைகள், **यस्मिन्** - எவனிடத்தில், **प्रतिष्ठिताः** - நிலைபெற்று நிற்கின்றனவோ [எவனை ஆத்மாவாகக் கொண்டிருக்கின்றனவோ], **वेद्यं तं पुरुषम्** - [முமுக்ஷுக்களால்] உபாஸிக்கப்படவேண்டிய அந்தப் புருஷனை, **वेद** - உபாஸி. **मृत्युः** - ம்ருத்யுவானது [அதாவது: ஸம்ஸாரமானது], **वः** - உங்களை, **मा परिव्यथाः** - உபத்ரவிக்க வேண்டாம். [ப்ரஹ்ம ஜ்ஞாநத்தின் பலம் சொல்லப்பட்டதாகிறது] **इति** என்று.

---

7. [ப - ரை.] **तान् होवाच** - [பிப்பலாதர்] அவர்களைப் பார்த்துச் சொல்லுகிறார். "**एतावदेव** - இவ்வளவுதான், **अहम्** - நான், **परं ब्रह्म** - பரப்ரஹ்மத்தைப்பற்றி, **वेद** - அறிவேன். **अतःपरम्** - இதற்கு மேல், **नास्ति** - [எனக்கு அந்த ப்ரஹ்மத்தைப்பற்றிய ஜ்ஞாநம்] இல்லை" **इति** - என்று.

http://acharya.org

8. [ப - ரை.] **ते** - அவர்கள் [அந்த ஆறு ஶிஷ்யர்களும்] **तम्** - அவரை [பிப்பலாதரை], "**त्वं हि नः पिता** - நீர்தான் எங்களுடைய தகப்பனார். [ஏனென்றால்] **यः** - யாதொரு நீர், **अस्माकम्** - எங்களுக்கு, **अविद्यायाः** - ஸம்ஸாரத்தின், **परं पारम्** - எல்லை நிலத்தை, **तारयसि** - அடைவிக்கிறீரோ" **इति** என்று [சொல்லிக்கொண்டு], **तम्** - அந்தப் பிப்பலாதரை, **अर्चयन्तः** - பூஜித்தார்கள். **परमर्षिभ्यो नमः** - மஹர்ஷிகளுக்கு நமஸ்காரம். இது இவ்விடத்தில் இரட்டித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி இரட்டித்துச் சொல்வது, அத்யாயத்தின் முடிவைக் காண்பிக்கின்றது. 'மஹர்ஷிகளுக்கு நமஸ்காரம்' என்று சொல்வது, முடிவில் செய்யவேண்டிய ஶாந்தி பாடம் ஆகின்றது. வித்யையைக் கொடுக்கிற குருவானவர் ஶிஷ்யரை ஜநிப்பிக்கிறார் என்றும், அதுவே அந்த ஶிஷ்யனுக்கு ஶ்ரேஷ்டமான ஜந்மமென்றும் ["**स हि विद्यातस्तं जनयति। तच्छ्रेष्ठं जन्म**"] சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் பிப்பலாதரைப் பிதாவென்று சொன்னது உபபந்நமே.

இந்தக் கடைசி வாக்யத்திற்கு முன் வாக்யத்தில், உபதேஶம் முடியுமிடத்தில் பிப்பலாதர் தமது உபதேஶத்தை "**नातः परमस्ति**" என்று உபஸம்ஹாரம் செய்திருக்கிறார். இந்த வாக்யத்திற்கு 'இதற்கு மேல் இல்லை' என்பது ஶப்தார்த்தம். இதற்குமுன் இருக்கும் "**तावदेवाहमेतत्परं ब्रह्म वेद**" [பரப்ரஹ்மத்தைப்பற்றி நான் இவ்வளவே அறிவேன்] என்பதற்கு ஒட்டி, நமது ஆசார்யர்கள் இந்த வாக்யத்திற்கு, "நான் இப்பொழுது செய்த உபதேசஶத்தைக் காட்டிலும் அதிகமான ப்ரஹ்மஜ்ஞாநம் எனக்கு இல்லை" என்று கருத்து விவரித்திருக்கிறார்கள். வேறு சிலர், இவ்வாறு கருத்தைச் சொல்லாமல், "கீழ்ச் சொன்ன ஷோடஶகலனை இருக்கும் ஜீவனைக் காட்டிலும் விலக்ஷணனான பரப்ரஹ்மம் ஒன்றுமில்லை" என்று தாத்பர்யம் சொல்வார்கள். அப்படி தாத்பர்யம் சொல்வது அநுபபந்நம் என்பதற்கு இரண்டு முக்யமான ஹேதுக்களுண்டு. (1) இந்த ப்ரஶ்நத்தில் உபபாதநம் செய்யப்பட்டுள்ள விஷயங்களுக்கு இவர்கள் சொல்லும் உபஸம்ஹாரம் ஒத்ததன்று. (2) ஜீவனைக் காட்டிலும் விலக்ஷணனான ப்ரம்ஹமே இல்லை என்று நிர்ணயிப்பது, வேறு இடங்களில் வ்யக்தமாகக் காணப்படும் அநேக ஶ்ருதி வாக்யங்களுக்கு விருத்தமாகும். ஸ்ரீ வ்யாஸ பகவான், 'ஆத்யாத்மிகம் முதலிய துக்காநுபவத்திற்கு யோக்யமான ஜீவாத்மாவைக் காட்டிலும் அர்த்தாந்தரபூதமான ப்ரஹ்மமொன்று உண்டு' என்பதை '**अधिकन्तु भेदनिर्देशात्**' இத்யாதியான ஸூத்ரங்களால் நிர்ணயித்திருக்கிறார். "**य आत्मनि तिष्ठन्**" [எவன் ஜீவாத்மாவுக்குள் இருக்கிறானோ] இத்யாதியான ஶ்ருதி வாக்யங்கள் இந்த நிர்ணயத்திற்கு ப்ரமாணம். ஆகையால் ஜீவனைக் காட்டிலும் விலக்ஷணனான பரமாத்மா இல்லையென்று பிப்பலாதரின் உபஸம்ஹார வாக்யத்திற்குப் பொருள் கொள்வது அநுபபந்நம்.

ஆறுவது ப்ரஶ்நம் முற்றிற்று.

http://acharya.org